உ
சிவமயம்.

வேளாளன்

தூத்துக்குடி.

"மேழிச் செல்வம் கோழை படாது"

வயது 1 } 1105-ளுசுக்லஹு மார்கழிமீ 2-உ { மாதம் 9

"அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

சமூக கனவான்களுக்குச் சமர்ப்பிக்கும் விண்ணப்பம்.

கனவான்களே! நம்சமூகத்தில் அளவிலா ஆர்வங்கொண்டு நமது வேளாளனை ஆரம்பித்து என் வியாபாரத்தையுங் கவனியாமல் கைப்பொருளைச் செலவு செய்து பல கஷ்டங்களினிடையே ஏழு மாதங்களாக நடத்திவருகின்றேன். தங்களுடைய உத்திரவின்பேரிலும், தங்களின் உற்றார், உறவினர்களின் உதவியால் தங்கள் உத்திரவன்னியிலும் வேளாளனை ஆதரிப்பீர்களென்ற முழு நம்பிக்கையின் பேரிலும் அனுப்பினேன். தாங்கள் அனைவர்களும் அன்புடன் பெற்று வருகிறீர்கள். ஆனால், தங்கள் சந்தாத் தொகைகளைப் பெரும் பகுதியினர் இன்னும் அனுப்பியுதவவில்லை. அனுப்பி யுதவாத அன்பர்களுக்கு நாலாவது இதழில் அறிவித்தபடி ஐந்தாவது இதழ்முதல் வி. பி. யில் அனுப்பி வருகின்றேன். கனவான்களெல்லாரும் வி. பி. யைப் பெற்றுச் சந்தாவைச் செலுத்தி வேளாளனை ஆதரிக்க அன்புடன் வேண்டுகின்றேன். வி. பி. யில் சந்தாவைச் செலுத்த மறுத்து விடுவீர்களாகில் எமக்கு மிகுந்த நஷ்டமும், கஷ்டமும், மனத்தளர்ச்சியும் ஏற்படுமென்பதைத் தாழ்மையாய்த் தெரிவிக்கின்றேன்.

—பத்திராதிபன்.

நம்மரபும், நம்நகரும்.

இதன் முன் ஆறுவது இதழில் இத்தலைப் பெயர்கொண்ட கட்டுரையொன்று வரைந்து வெளியிட்டதும் அதனில் மறுமுறையும் இதுபற்றி எழுதுவதாய் எழுதியதும் நேயர்கள் மறந்திருக்க மாட்டார்களென நம்புகின்றோம். முந்திய கட்டுரையில் நம்மரபின் குறைகளையும் அதனை நீக்கும் முறைகளையும் ஒருவாறு எழுதினோம். இனி மற்றைய மரபினர் உயர்வடைந்துவரும் வழிகளையும் அதனில் நாம் அறிந்துகொள்ள வேண்டிய முறைகளையும் ஒருவாறு எழுதுகின்றோம்.

உயர்வடைவதற்குரிய வழிகள் காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப பல்வகைப்படினும் எக்காலத்தும் எத்தேசத்தும்மாறுபாடின்றிஒருபடித்தாயது ஒற்றுமைஎன்னும் ஒருவழியேயாம். ஒற்றுமைஉண்டாவதற்குத் தன்னுயிரைப்போல் மன்னுயிரை ஓம்பும் தகைமை வேண்டும். ஒற்றுமையால் உயர்வடைந்துவரும மரபினர் நம்நாட்டில் மிகமிகக் குறைவு. மிகச்சில மரபினரே ஒற்றுமையின் உட்கருத்தையுணர்ந்து அணுப்பிசகாது அதன் வழிநின்று உயர்வடைந்துவருகின்றனர். பற்பல மரபினர் ஒற்றுமையின் உயர்வையுணராது ஒருவரோடொருவர் பிணக்குற்று தாழ்ந்த நிலையினின்று தவிக்கின்றனர். தவிக்கின்ற மரபினரில் நம்மரபினரும் ஒன்று. நம் மரபினர் முற்காலத்தில் ஒற்றுமை வழிநின்று பற்பல துறைகளிலும் உயர்வடைந்திருந்தனர்; இதற்கு சான்றுகள் பல நூல்களில் மலிந்துகிடக்கின்றன. வேளாளர் உயர்வைப்பற்றி ஞானசம்பந்தப் பெருந்தகையே நவின்றிருக்குமானால் வேறு சான்று வேண்டுமோ? மனநலமாண்பால், தெய்வநம்பிக்கைத் திறத்தால் கூறிய சொற்பிழையாமைக் குணத்தால் வள்ளன்மையால் உயர்நிலை எய்தி வாழ்வு நடாத்திய நம்மரபினர், இத்தகையதொன்றும் இலராய் தாழ்வெய்தியதோடமையாது தாழ்வெய்திேனோம் என்ற உணர்வே இன்றி பழநிலையைப் பகர்ந்த பாட்டுக்களைப் பாடி ஆனந்தக்கூத்தாடி இறுமாந்திருக்கின்றனர். இஃது பெரிதும் ஏற்றுக்கொள்ள வியலாததொன்று.

பழம் பெருமை பேசுவதால் பயனொன்றுமின்று. மேலால் செய்வன திருந்தச்செய்து உயர்நிலையடைதல்வேண்டும். முதன்

மையாக, வியாபாரஞ்செய்யும் நம்மரபுமக்களிடத்து மகமை என்று ஒருமுறையை நிறுவி வரவுக்குத் தகுந்த வழியில் குறித்த தொகை வசூல்செய்து மூலதனம் ஏற்படுத்தல்வேண்டும். இஃது ஒற்றுமையுணர்ச்சியை வளர்க்கும் ஓர்வழியாகும். மூலதனப்பொருளை நம்மரபு ஏழை மக்களுக்குத் திறமைக்கேற்ற தொழிலைக் கொடுத்து தகுதிக்குந் தொழிலுக்கும் ஏற்றவாறு கடன் கொடுத்துதவுதல் வேண்டும்.

தொழிற்றிறமையுள்ள நம்மரபுமக்களில் பணமில்லாமல் பரிதபிக்கின்றவர்கள் பலரிருக்கலாம். அவர்களை உழைப்புப் பங்கினராகச் சேர்த்துக்கொண்டு பற்பல தொழில்களைச் செய்துவரல் வேண்டும். தொழிலில் ஏற்றத்தாழ்வு எண்ணுதல் கூடாது. கீரை விற்றல்முதல் எல்லாத்தொழில்களையும் இழிவு என்று எண்ணாது ஏற்று நடாத்தல்வேண்டும் கீரை, காய்கனி முதலிய சில தொழில்களை சிறு தொழிலென்றும் இழிவென்றும் எண்ணி அவைகளைச்செய்யாது விடுத்து அவைகள் நாடோறும் நமக்கு வேண்டியிருப்பதால் அவைகளைச்செய்யும் வியாபாரிகளாகிய பிறமரபினரிடம் வாங்கச்சென்றால் நம்மை அவர்கள் ஒரு பொருளெனக் கோடாமல் தங்களையின்றிப் புகலில்லை என்ற எண்ணம் உள்ளூர உண்டாகி சமயம் நேர்ந்துழி அவமதிக்கவுஞ் செய்கின்றார்கள். இஃது நாடோறும் காணும் நம்மக்கள் அநுபவமாகும்.

இதுவரை வரைந்தவற்றால் மற்றொரு மரபினர் எத்தொழிற் செய்யினும் இழிவில்லையெனக்கொண்டு தொழிற்செய்து உயர்வடைந்து வரும் முறைபோல நம் மரபினரும் உயர்வடைய முயலுதல்வேண்டும். நம் மரபினர் உயர்வடையவேண்டுமென்பதன் பொருள் உடுத்தத்துணியும் குடிக்கக்கஞ்சியுமில்லாமல் மானத்தால் பட்டினி கிடந்து பரிதவிக்கும் மக்களுக்கு அதனினின்று விடுதலைபெற்று வாழ வகைதேடுவதேயாம். காச்சல் முதலிய பிணிகள் பிடித்தால் சுக்குவாங்கத்துட்டில்லாமல் துடிக்கின்ற மக்கள் எத்தனை பேர் இருக்கின்றனர். இத்தகைய மக்களுக்கு மரியாதையான முறையில் கால், அரை, கூலியாவது கிடைத்தற்பொருட்டு அரசாங்கப்பதிவுக்கூட்டு வியாபாரத்தொழில்கள் துவக்குதல்வேண்டும். "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்பதுபோல் செல்வந்தர்கள் மரபின் தாழ்வு தங்

களுடையதெனக்கருதி தகுந்த முறையில் முனைந்து நின்று முன்னேற்றமடையவேண்டுவன செய்வார்களாக. "முனிவரும் மன்னரும் பொன்னுன் முடியும்" என்பது ஆன்றோர் அருள்மொழி; இதனை ஊன்றியுணர்வார்களாக.

நம்மரபு மத்திய வகுப்புமக்கள் தாங்கள் நாட்டோறும் நடாத்தும் வாழ்வின்முறையினும் சிறப்புச்செய்யுஞ் சிற்சில காலங்களினும் செல்வச்சிறப்புடையார் தங்களை மதிக்கவேண்டுமென்ற உள்ளக்கருத்துடன் கடன்பட்டாயினும் வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து வீணிற் கெடுகின்றனர். தாங்கள் கெடுதலோடமையாது வரவுக்குத்தகுந்த செலவுடன் வாழ்நாள்நடாத்தும் மக்களைக்கேலி செய்து நகையாடுகின்றனர். கௌரவஉத்தியோகங்களில் மோகங் கொண்டு கணக்கற்ற பொருள் வாரி இறைத்து இறுதியில் என் செய்வோமென ஏங்கி நிற்கின்றனர். இவைகளினின்று அறவே அகலவேண்டும். ஆடம்பர வாழ்க்கையை அறிவுடையார் மதியாரென நினைந்து அறவே அகற்றிவிடவேண்டும். வருவாய்க்குட்பட்ட செட்டான செலவுடன் வாழ்வு நடாத்துதல்வேண்டும். செட்டுடையானை லோபி எனச் சிலர் கூறுவர். லோபம் வேறு செட்டு வேறு. லோபம் அறவே ஆகாது. செட்டு அவசியம் வேண்டும். நம்மரபு நடுத்தரமக்கள் இதனைஊன்றியுணர்ந்து ஒழுகி உயர்வடைவார்களாக.

பெரியார்பிரிவு

சென்னை "லோகோபகாரி" பத்திராதிபர் திரு. ப. சு. நெல்லையப்பபிள்ளையவர்களின் தந்தையார், திரு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் சமீபத்தில் மரணமடைந்த செய்தியறிந்து மிக வருந்துகின்றோம். பிள்ளையவர்களின் ஆன்மா ஆண்டவனடியில் வாழ்க.

இசைவல்லார் இறந்தார்: மதுரை பொன்னுசாமிமேளகாரர் சமீபத்தில் மரணமடைந்தார். அவர் தற்காலமிருககும் மேள்காரர் களில் தலைசிறந்து விளங்கியவர் அவர்மைசூர் சமஸ்த்தான வித்துவானுகவிற்றிருந்தார். அவர்மரணம் சங்கீதவுலகிற்கு மிகுந்த நஷ்டமாகும். அவர்பிரிவுகுறித்து நாம்பெரிதும் வருந்துகின்றோம் அவரது ஆன்மாசாந்தியடைக.

இயற்கை உணவு

நல்லுணவை மிருகங்களிடமிருந்து கற்கலாம்.

சென்னை, திரு. கா. சி. சிவசங்கர முதலியார் அவர்கள்.

குழிமுயல், புல், உருளைக்கிழங்கு முதலியவைகளையே தின்னுகின்றது. மாமிசம், எலும்பு முதலியவைகளை தொந்தரவு செய்து கொடுத்தாலும் தின்பதில்லை.

குரங்கினும் நாமே குறைந்தவர்கள்:- குரங்கிற்கு ஒரு புதிய கொட்டை கிடைத்தால் அது அதை எடுத்து, முகர்ந்து வாசனை பார்த்து, பின்னர் நாவில் சுவைத்துப்பார்த்து, அது நஞ்சுள்ளது என்றோ நல்லுணவு என்றோ உணர்ந்தபின்பு அதைத்தின்னத் தொடங்குகின்றது அவ்வுணர்ச்சி நமக்கிருக்கிறதா? குதிரை, கோவேறுகழுதை, கழுதை, பசு, எருது, எருமை, ஆடு, ஒட்டகம் முதலியன புல் தழை முதலியவைகளினாலேயே உயிர் வாழ்கின்றன. எக்காரணம்பற்றியும் அவைகள் மாமிசம் உண்ணுவதில்லை கொரிலா என்னும் வாலில்லாக்குரங்கு அல்லது காட்டு மனிதன் பத்தாள் பலத்தையுடையது. பருப்புகள், பழங்கள், மரக்கறிகள், பால், கொட்டைகள், தானியங்களினாலேயே உயிர்வாழ்கின்றது.

மனிதன் வேட்டையாடவாவது கொலைசெய்யவாவது பிறக்கவில்லை. புலி, சிங்கம், பூனை, நாய், ஓநாய் முதலியவைகள் தமது அகன்ற மார்பாலும் சுருங்கிய வயிற்றாலும் பாய்ந்து கூரிய நகங்களால் பற்றி நின்று மக்கள் மாமிசத்தைபச்சையாய்த்தின்றதினாலேயே அது இயற்கையுணவல்லவென்பது விளங்குகிறது. சுமார் நாற்பது ஆண்டுகளுக்குமுன்னே ஆங்கில வயித்தியர்களின் அபிப்பிராயப்படி பல சோகையர்கள் கசாப்புக்கடைகளில் இறக்கப்போகும் மாடுகளின் வெட்டுண்ட கழுத்திலொழுகும் சூடான இரத்தத்தைக் குடிக்க வரிசைவரிசையாய் உட்கார்ந்து கொண்டிருப்பார்களாம். அந்த மாடுகள் தங்கள் சிவந்த இரத் தத்தை

புல்லினும் தழைகளினுமிருந்தல்லவா பெற்றன. அதுபோலவே உணவுச்சுண்ணும்பும் உணவு இரும்பும் மாமிசத்தில் இருப்பதைப்பார்க்கிலும் கீரைகளிலேயே அதிகமாயிருக்கின்றனவென்று மருத்துவ நிபுணராகிய ஷெர்மன் என்பவர் எழுகிறார்.

மாட்டுக்கறியிலிருப்பதைக்காட்டிலும் உண்இரும்பு பேரீச்சம்பழம், அத்திப்பழம், திராட்சைப்பழம் முதலியவைகளில் ஒரு அவுன்ஸ் அதிகம் இருக்கின்றது. மாமிசத்திலிருப்பதைக்காட்டிலும் தவிட்டிலே மூன்று பங்கு அதிகம் இரும்பு இருக்கின்றது. மரக்கறியிரும்பு மாமிச இரும்பைக்காட்டிலும் உயர்ந்ததாகவிருக்கிறதென்று ஷெர்மன் மருத்துவநிபுணர் கூறுகின்றார். மாமிசத்திலுள்ள சில பூச்சிகள், சிவந்த இரத்த அணுக்களை அழிக்கின்ற நஞ்சை குடலில் உண்டாக்குகின்றனவென்று எர்டர் என்கிற வயித்தியப்புலவர் கூறுகின்றார். முற்காலத்திலே கிரீக் தேசத்திலும் உரோமாபுரியிலும் சிலம்பத்தில் வல்லவராயிருந்த வீமர்கள், (வீரர்கள்) பார்லி அடைகளையும் கோதுமை ரொட்டிகளையுமே தின்றுவாழ்ந்தார்கள். பிதாகிரூன் என்பவரைப்போலவே அவர் மாணவர் மிலோ என்பவர் உணவில் வீர சைவராயிருந்தார் என்பது இருபது நூற்றாண்டுகளாயினும் மறக்கவில்லை

பஸ்கி அல்லது தோப்பணம், மாமிசம உண்போர் 300 முதல் 400 வரைதான் போட்டார்கள் என்றும அதேசெட் மாணவர்களில் இரண்டாண்டு மாமிசமுண்ணாதிருந்த ஒருவன் 1800 பஸ்கி போட்டுவிட்டு பின்னும் சில மயில்கள் நடந்தான் என்றும் பிஷ்ஷர் புலவர் சொல்லுகிறார். மாமிசமுண்ணுவோருக்கு பத்து நிமிஷத்திற்குமேல் கையை நீட்டிக்கொண்டிருக்கமுடியவில்லையென்றும் மாமிசத்தை நீக்கினவர் 90 நிமிஷம்வரை கையை நீட்டிப்பிடித்திருந்தார்கள் என்றும அப்புலவரே கூறுகின்றார். மாமிச நீககத்தால் உண்டாகும் குறைவை பால் தயிர் நெய்யிலிருந்து பெறலாமென்றும், கீரை, காய், கிழங்கு, பழம் முதலியவைகளிலுள்ள குறைவை துவரைக்கொட்டை, மணிலாக்கொட்டை (மல்லாக்கொட்டை) வாதுமைக்கொட்டை தேங்காய் முதலிய

வைகளிலிருந்து பெறலாமென்றும், மெக்காலம், மெண்டெல், ஆப்பார்ன், முதலிய, ஆராய்ச்சியாளர்கள் யோசனை சொல்லுகின்றார்கள். தன் ஆயுளில் ஒருமுறைகூட மாமிசத்தைத்தொடாத தென்னாப்பிரிக்கா கூட்டத்தாருள் ஒருவன் இருபத்துநான்குமணி நேரத்தில் நூறு மயில் ஓடினானென்றும் அவன் அதிக தைரியமுடையவனாகவும் சிங்கத்தை உதைக்கும் ஆற்றலுடையவனாகவும் இருந்தானென்றும் இர்வின் பிஷ்ஷர் புலவர் மொழிகின்றார்.

தொடரும்

குலசேகரபட்டினம் பூர்வீக வரலாறு.

குலசேகரபட்டினமானது திருநெல்வேலி ஜில்லாவின் தென்கிழக்கில் கடலோரமாகத் திருச்செந்தூருக்குத் தெற்கே ஏழு மைல் தூரத்தில் இருப்பது யாவரும் அறிந்ததே. முற்காலத்தில் இவ்வூர் வாணிபத்திலும், கைத்தொழிலிலும் மேன்மையுற்று சீரும் சிறப்பும் பெற்றிருந்ததை நமது முன்னோர்களின் வாய்மொழியாகக் கேள்விப்படுவதோடு, பல அறிகுறிகளும் காணக்கிடக்கின்றன. துறைமுகத்திலிருக்கும் பாழடைந்த பல பெரிய கட்டிடங்கள் முற்காலத்து வியாபாரப் பெருக்கத்தைக் காட்டுவதோடு, மகமதியர் தெருக்களில், தெருமத்தியில் மரங்களும், வீட்டு ஓரங்களில் இடமிருப்பதும் முற்காலத்தில் நெசவு வேலை நடைபெற்ற இடமென்று அறியக் கிடக்கின்றது. வியாபாரம் அடியோடு ஒழிந்து போகாவிட்டாலும் நெசவுத் தொழில் மருந்துக்கேனும் இல்லாமல் போய்விட்டது ஒரு பெருங் குறையேயாகும். தென் இந்தியா இருப்புப் பாதை தூத்துக்குடிக்கு வந்து சேருமுன், தென்பகுதிக்கு இவ்வூரே பெரிய துறைமுகமாக இருந்திருக்கிறது. மதுரை முதலிய இடங்களிலிருந்துங்கூட இவ்வூருக்குச் சாக்குகள் வண்டியில் வந்து இங்கிருந்தே மேனாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. அக்காலத்தில் சில மகமதியர்கள் வியாபாரம் செய்துகொண்டிருந்தபோதிலும் பெரும்பகுதித் தொழில் நம வேளாள மரபினரிடமே

இருந்துவந்தது. பல வியாபாரிகளிடம் பாய்க் கப்பல்கள் பல இருந்தன. கூடலூர், காக்கினாடா, ரெங்கூன், கொளும்பு, கொச்சி, பாம்பே முதலிய இடங்களுக்கு நம்மவர்கள் பலர் சென்று பாய்க் கப்பல் மூலம் சரக்கு வருத்தி விற்றும், வாங்கி அனுப்பியும் தொழிலை வெகு திறம்பட நடத்திவந்திருக்கின்றார்கள். அக்காலத்தில் நம்மவர்களின் செல்வ நிலை வெகு சிறப்புற்றிருந்ததால் நம்மவர்களின் ஆதிக்கமே ஊரில் பெருக்குற்றிருந்தது. செல்வமும், கல்வியும், தெய்வ பக்தியும் ஒருங்கே அமையப் பெற்று இச் சில்லாவில் வேறு எவ்வூரிலும் இல்லாத அவ்வளவு அதிகத் தலைக்கட்டு உள்ள ஒரே இனத்தவரின் கூட்டமாக நமது வேளாள குலத்தவர்க்கே ஒரு சேகரமாக அக்காலத்தில் இவ்வூர் தோன்றிற்றென்பது மிகையாகாது.

தற்கால நிலை.

அவ்வளவு சீரும சிறப்பும் பெற்றிருந்த நமது குலத்தவரின் நிலை, தற்பொழுது எவ்வளவு இழி நிலைக்கு வந்துவிட்டிருக்கிறதென்பதை ஊன்றி நினைக்கும் எவரின் மனமும் பதை பதைக்காமல் இருக்காது. பாய்க் கப்பல் பலரிடம் பல இருந்த காலம் போக, இதுபொழுது எவரிடமும் இல்லையென்று சொல்லாது, ஒருவரிடம ஒரு கப்பல் இருக்கின்றது. வியாபாரத்திலோ வேறு சாதியினரின் ஆதிக்கம் பெருகிவருகிறது. வாலிபர்களெல்லாம் வாழாக் கிடக்கின்றனர். ஊரில் கக்ஷிகளும், தரித்திரமும பெருகிவருகின்றன. இதற்கு நம்மவர்களின் முயற்சியின்மையும் கவனக் குறையுமே காரணமாகும். நிவிர்த்தி முறையை மறு சஞ்சிகையில் எழுதுவோம்.

"மிரைட்ஸால்"

நம் மரபினர் மலிந்து வாழும் குலசையில் கட்சிப்பிரிவுகண்டு பெரிதும் கலங்குகின்றோம்.

குறிப்பு:—சிறப்பாக குலசைமக்களும் பொதுவாகப் பிறவூர் மக்களும் இக்கட்டுரையை ஊன்றிப்படித்து உயர்ந்தநிலை நிய்த ஒற்றுமையுடன் வாழவேண்டுகின்றோம். ப—ர்

நமது சமய ஒழுக்கம்.

திரு. சங்கரநாராயண தேசிகர் அவர்கள்
(முன் தொடர்ச்சி)

சிறப்பிலக்கணமாவது:—புறத்திலக்கணம், உடலிலக்கணம் அகத்திலக்கணம் என மூன்று வகைப்படும். அவைகளாவன-திருவெண்ணீறு உருத்திராக்கமணிதல், குரு வழிபாடு செய்தல், சிவத்துதி செய்தல், திருவைந்தெழுத்தை உச்சரித்தல், சிவ பூஜை செய்தல் சிவ தருமங்கள் செய்தல், சிவ ஞானசாத்திரங்கடெளிதல், திருக்கோயில் வணக்கஞ்செய்தல், தீக்கையற்றவர்கள் ஆக்கியதும், தொட்டதும், பார்த்ததும், புசியாது விலகுதல், சிவனடியார்க்கியல்வன கொடுத்தல்,என்னும்பத்தும் புறத்திலக்கணமாம்.

சிவனது பெருமையைச்சிந்திக்குந்தோறும், பேசுந்தோறுங் கண்டம் விம்முதல், நாவு துடித்தல், சரீரம் நடுங்குதல், உரோமஞ் சிலிர்த்தல், குறுவேர்வைகொள்ளுதல், நாவுதழுதழுத்தல், ஆனந்தக்கண்ணீர் சொரிதல், வாய்விட்டழுதல், பரவசமாகித்தன்னை யயர்த்தல், என்னும் பத்தும் உடலிலக்கணமாம்.

திருவைந்தெழுத்தை மானதமாகச்செபித்தல், மானதபூஜை யாற்றுதல், சிவபெருமானைத்தன்னொடுபிறிவறக்காண்டல், என்னும் மூன்றும் அகத்திலக்கணமாம். ஆகப்பொதுவிலக்கணம் பதினெட்டும், சிறப்பிலக்கணம் இருபத்திமூன்றும பொருந்தியவர்களே உண்மைச் சிவனடியார்கள் "சுத்த சைவர்கள்" என்று சொல்லப்படுவார்கள்.

சுத்த சைவர்களான சைவ வேளாளர்களது சீவனோபாயத்தொழின் முறை என்னும் என்று சிந்திக்கப்புகின்; சிவாலய பூஜை முதலிய புரிதலும், சைவ மடாதிபதியாயிருந்து சீடசந்தானவிருத்திக்காகச்சிவதீக்கை ஆகமாதிசாத்திரோபதேசங்கள் முதலியன செய்தலும், நீதிபதி, வழக்கறிஞர், அமைச்சர், முதலியவர்களாயமைந்திருத்தலும், தரும வட்டியால் அரசர் முதலிய வர்

களுக்குச்சாலும்நிதித்துணை முதலியன புரிதலும், மாணாக்கர்களுக்குக்கல்வி பயிற்றுவித்து ஊதியமுதலியன பெருதலும்,வாணிப முதலியன புரிதலும், வேளாண்மை முதலியனயாவும் செய்யலாமென்று ஆகமாந்தரங்களில் அமைக்கப்பெற்றிருகின்றன. அவையனைத்தும் ஈண்டுகாண்பதற்கரிதாதலானே எடுத்துக்காட்டாக,

"சைவானுமிஹஜீவனம் கதமதோக்ருஷ்யார் ஜனம் பூஜனம் மடாபத்யமயம்ஹிஸஜ்ஜன இதிக்ஞாத்வாதுதத்தாயதி; வித்யாதான முத்தாயதிஸ்சுபக்ரு பப்ரீத்யாயதிர் தர்மதோ, வ்ருத்யா சிஷயஜநாயதி: ஸ்வவிஹிதா னுஷ்டானவாணிஜ்யஜம்"

என்பதைக்காண்கின்றோம். ஆகையால் மேற்கண்ட தொழிற் பெயருடையனைவர்களும் சுத்த சைவர்களே என்று நாம் தெரியக்கிடக்கின்றது. சுபம்.

மெய்கண்ட தேசிகன் மெல்லடி வாழ்க.

உயர்ந்த வாழ்க்கை வாழ வகை.

பாளையங்கோட்டை திரு. C. P. ஆனந்தா அவர்கள்

(முன் தொடர்ச்சி)

பள்ளிப்பயிற்சிகளும், கல்லூரிகளிற்பெற்ற பரோக்ஷஞானமும் (Theories) கணக்கற்று அவர்கள் முன் இருக்கும்பொழுதும் வாழ்க்கையின் கடினமான தீர்வைகள் படிப்படியாகக் கற்றுக்கொடுப்பன வாகின்றன. வாழ்வின் கடின பாகங்கள் வெற்றியின் தத்துவம் (அதாவது இரகசியம்) சரியாக மனிதனுள்தான் இருப்பதென்றும், தீர்க்கமாய்ச் சுயேச்சையாய் நடக்கும் சக்தியில்தான் அமைந்திருப்பதென்றும் நிதர்சனமாகக் காட்டுவனவாகும்.

பல்கலைக் கழகங்கள் இம்மாதிரியான கலைவளத்தின் பெருக்கிற்காக மாணவர் குழுவிற்கு ஊட்டும் கல்வி விஷயத்து எவ்வள

வு தூரம் சிரத்தைகொண்டனவாக, அல்லது முயற்சியுடையன வாக விருக்கின்றன! நீங்கள் எத்தகைய வாழ்வு வாழ்ந்தாலும் நீங்கள் எத்தகைய அம்சங்களால் சூழப்பட்டுக் கிடந்தாலும் உலகிற்கு அரிய சேவை நிகழ்த்துவீர்களா அல்லது அதற்கு மாறாக கீழ்க் காணும் அம்சங்களினால் தவறிவிடுவீர்களாவென்பதுதான் முக்கியமாய்த் தீர்க்கப்படவேண்டிய விஷயம். அதாவது நீங்கள் போட்டிருக்கும் அஸ்திவாரத்தின் குணபேதம் ஆரம்பத்தின் அல்லது உதயத்தின் மதிப்பளவை—அதில் கட்டுப்பாடுள்ள ஞாபக சக்தி—நீங்கள் விருத்தி செய்துள்ள ஆரம்ப காலத்திய சுறுசுறுப்புள்ள முயற்சியின் (வேலையின்) பலம்—நமது மாணவர் விஷயத்து இம்மாதிரியான அஸ்திவாரத்திற்கு அடிகோல் அல்லது அபிவிருத்திக்காக பல்கலைக் கழகங்கள் ஏதேனும் யத்தனஞ் செய்கின்றனவா?

இற்றைப்பொழுதைய அதிசயத்திற்குரிய சக்தி வாய்ந்த போட்டி மெதுவாய்ப் போகின்றவர்களையும் பயங்காளிகளையும் நம்பிக்கையின்மைபற்றி சமாதானமாக நடிப்பவர்களையும் தள்ளி அடித்துக்கொண்டு இலௌகிக அடையின் எழுச்சி நோக்கிய அதிவேகத்தில் உலகம் உருளுகையில் பயிற்சியற்ற—ஆவலற்ற மனத்தைக் கீழே பாதல அந்தகாரத்தில் விழுந்துவிடுமாறு வற்புறுத்துகின்றது. உங்கள் முன் திறந்துவைத்திருக்கும் காலத்தின் அதிசய உலகம் உங்களை நாடி நிற்கும் அளவில்லாத எதிர்கால நலங்கள் உங்களின் ஆத்ம சக்தியை செழுமையாகவும், அதேபொழுதில் வீண்மனக் கோட்டைகளை எரித்து பஸ்மீகரப் படுத்தவும் போதியது.

ஆனால், நமது பல்கலைக் கழகங்கள் சித்த விருத்தியைச் செழுமையுடைய சீரியதாக்கித் தயாரிக்கின்றனவா? இற்றைப் பொழுதைய உலகம சப்தித்த சப்தங்களைத் திருப்பிச் சப்திக்கும் யந்திரங்களை (Phonographs) (அதாவது போனகிராப்—கிராமபோன் பெட்டிகளை) சிறிதும் விரும்பவில்லை. தாகம் நிறைந்த ஆவலுடன் வேகமாய்த் தத்துவங்களைக் கிரகிக்கக்கூடிய சக்தி—தத்துவங்களைப் பாகுபடுத்தவும், ஒன்றிணைத்து மொத்தங்கூட்

டிப் பார்க்கவும் உள்ள சக்தி—யுக்தி பூர்வமாகவும், நிரந்தரமாகவும் சதாவும் சிந்திக்கக்கூடிய சக்தி—வாய்ப்பாடான பரோக்ஷங்களை (Theories) அனுவதித்து (Praetically) நடவடிக்கையில் வெற்றியுடையதாகச் செய்யும் சக்தி யாரிடமுண்டோ அவர்களுடைய பலப்படுத்தப்பட்ட பூர்வாங்கமான சக்தி—சிருஷ்டிக்கவும் வழிநடத்தவும் கூடிய சக்தி—அவர்களின் பயிற்சிபெற்ற சக்தி இவை அனுபவ உலகிலுள்ள போட்டியில் வெற்றிபெருவதற்கு ஆஸ்பதமாகவிருக்கின்றன.

கையிருப்பிற்குப் பதில் கடன் நிறைய உடைய முழுவதும் தோல்வியுடைய ஆனால், அங்கிகளும், குல்லாவும் மாத்திரம் சரியாகத்தரித்த பல கல்லூரி மாணவர்களை நமக்கு வெகுவாகத்தெரியும். இன்னும் எந்த வெற்றிக்கும சக்தியற்ற பலர் தேர்ச்சிபெறுகின்றனர்; அவ்விதமிருந்தாலும், இவர்கள் வெற்றிக்கும் நலனுக்கும் ஒரு ஜாதியை வழிநடத்தும் மகா புருஷர்களாகத் தங்களை ஆக்கிவிடத்தக்க அம்சம் தங்களுக்குள் வாய்ந்தவர்களே.

அஸ்திவார பலமற்ற சொன்னதைத் திருப்பிச் சொல்லும் கிளிகளை உற்பத்தி செய்யும் ஒருகல்விமுறை, புத்தகப்புழுக்களே போல உருப்போடும் ஒரு கல்வி முறை சிந்தனைசக்தி, மனோ உற்சாகம் இவைகளைப்பெருக்க முடியாத ஒரு கல்விமுறை, ஒருஜாதியின் விழிப்பிற்கு ஒரு நாட்டின் எழுச்சிக்கு உதவிசெய்ய முடியுமா ?

ஆகவே ஒரு ஜாதியின் உயர்ந்த வாழ்க்கைக்கு இளைஞர் குழுவினர் வழிநடத்தப்பெறும் முறையின் நெறி நேர்மை ஆரம்ப காலமான பூர்வங்தொட்டு சர்வமும் மனோ உற்சாகத்தை எழுப்பி, சிந்தனைசக்தியை உருப்படுத்தவல்லதாக விருத்தல் வேண்டும். இதைப்பற்றி இன்னொருமுறை விரிந்தாய்வம்.

வேளாளர் நிலைமை.

(திரு. இ. வெண்ணிமாலை பிள்ளையவர்கள் B. A., B. L.,)

(முன் தொடர்ச்சி)

நம்மில் பட்டிவாசிகள் உண்ணுவதிலும் பருகுவதிலும் பட்டினத்தார்களை ஒக்க நடிக்கின்றார்களென்றோம். ஆனால் பட்டினத்தார்கள் பல துறைகளில் போதிக்கும் முறைகளை அவர்கள் கைக்கொள்ளுகின்றார்களோவென்றால், இல்லை. விவசாய சம்பந்தமாய் பட்டினத்தார்கள் நிலப்பலனதிகரிக்கப் பலவேறு வழிகளைப் போதிக்கின்றார்கள். வெளியீடுகளும் வெளியிட்டுள்ளார்கள். வழிகளும் கைகண்டவைகள். அதற்குச்சான்று ஐரோப்பிய அமெரிக்கா நாடுகளிலிருந்து எடுத்துக்காட்டுகிறார்கள். எனினும் அம்முறைகளைப்பற்றிக் கொஞ்சமேனும் தெரிந்துகொள்ள முயலாமலும் தெரியவந்தவற்றை பழக்கத்தில்கொண்டுவர ஊக்கமில்லாமலும் நம் வேளாளர் இருந்துவருகிறார்கள். உலகில் ஒவ்வொரு துறையிலும் போட்டி மிகுந்துவிட்டது. இப்போட்டியில் ஊக்கவானே உன்னத மடைவான். வேளாண்மையிலும் போட்டி அதிகரித்துவிட்டது. இப்போட்டியில் நாமும் நிலைக்க வேண்டுமானால் நம் உழவு, நிலச் செப்பன், பயிரிடும் வகை முதலிய முறைகளை மேலும் மேலும் திருத்தி சுருக்கச் செலவில், பெருக்க விளைவுக்காய் வழிகளைத் தேடவேண்டுவது இன்றியமையாதது. நம் நாட்டுப் பருத்தியின் முற்கால நிலையென்ன? தற்கால நிலையென்ன? உலகுக்கே பருத்திக்குப் புகலிடம் பிறிதொன்றில்லாது நம் நாடே இருந்த நாட்கள் போய் இப்பொழுது இந்தியப் பருத்திக்கு தேட்டமில்லையென்றே சொல்லும்படியாய்விட்டது. ஏன்? ஏனைய அமெரிக்கா; ஈஜிப்த், மெசொப்பொத்தோமியாமுதலிய தேசங்களிலும் மேனாட்டார் பருத்திக்கு வேண்டிய நிலப் பக்குவம், பயிர்ப் பக்குவம் முதலியனவைகளை ஆராய்ந்து ஏராளமாய் விளைவிக்க இப்பொழுது ஆரம்பித்துவிட்டனர். அத்துடன் நிலநூல் ஆய்ந்து சொற்பச் செலவில் பெருவாரியாய்ப் பருத்தி உண்டாக்கவும் கற்றுவிட்டார்கள்.

எனவே, நம்மனோக்கு ஆதும் அடக்க விலைக்குங் குறைய விற்று இலாபமும் சம்பாதிக்க அவர்களால் இயலுகின்றது.

எனவே மேனாட்டினரை யொத்து நாமும் வேளாண்மையில் நவீன முறைமைகளைக் கைக்கொள்ளாவிடில் அன்னார் கொல்லன் உலையிலேயே ஊசியை விற்று ஊதியமும் சம்பாதித்துவிடுவார்களென்பது திண்ணம். என்னை? பருத்தியையோ பயறையோ நமக்கு அடக்கமாகும் விலைக்குங் குறைய ஏனைய நாட்டினர்களால் நம் நாட்டினர்க்கு விற்கமுடிந்து அவர்களும் அவைகளை நம் நாட்டிற்கு விற்பனைக்குக் கொண்டுவந்தால் நம் நாட்டுப்பண்டங்கள் எவ்வாறு அழியும்? பண்டங்கள் அழிவில்லையேல் பொருள் விளைவிப்பதால் பூமியுள்ளான் பலனடைய முடியாதே.

மனிதன் மெய்வருந்தி முயற்சிசெய்வதெல்லாம் தன் பொருள் நிலை விருத்திக்கே. கூலியில்லாக் கொத்தால் என்பயன்? உழவும் ஊதியங்கருதியே வேண்டற்பாலது. உழவில் ஊதிய பொருள் விளைவால் நம்நாட்டில் ஏனையநாட்டினரின் போட்டியின் காரணமாய் போதிய பலனில்லாது போய்விடின் உழவர்களுக்கு உழவில் ஊக்கம் உண்டாகாது. உழவால் பின் எங்ஙனம் நங்குலத்தாரின் பொருள் நிலை விருத்தியடையமுடியும்? எவ்வேலையிலும் ஏற்றமடைவதற்கு அதன் வருவாய் முக்கிய காரணம். உணவின் வருவாய் கைப்பிடிப்பென்றால் உழவர்கள் நாளடைவில் நாசமாவார்கள் என்பது திண்ணம். உழவர்கள் நாட்டின் அச்சாணி. நாட்டின் செழிப்பு ஆவதும் அவர்களால், அழிவதும் அவர்களால்; எனவே உழவுத்தொழிலின திருத்தம் வேளாளர் மட்டுமல்ல, மற்றும் நம் நாட்டின் ஏனையமாபிரானர்களும் காலந்தாழ்த்தாது கருத்துடன் கவனிக்க வேண்டிய காரியம்.

எனின் எவ்வகையில் திருத்துவது? வழிகள் பலவுள. அவைகளில் பாரதியார் பாடினபடி உழவு சம்பந்தமாயுள்ள பிறநாட்டுச் சாத்திரங்களை தமிழில் மொழி பெயர்க்க வேண்டியது மிகவும் அவசியம் உழவில் அடங்கியுள்ள பல் வேறுபகுதிகளைத் தனித்தெடுத்தாண்டுள்ள பிறநாட்டு நூற்கள் அநேகமிருக்கின்றன. மண்நூல், மழைநூல், பயிர்நூல், பலன்நூல், உரநூல்,

உழவு நூல் எனவேளாண்மையை இன்னோன்ன பகுதிகளாக்கி ஒவ்வொரு பகுதிக்கும் தனிநூற்கள் மேனாட்டார் இயற்றியிருக்கின்றனர். அவைகளில் மண்ணின் பல்வேறு அமைப்புகளையும், அமைப்புக்கேற்ற விளைபொருள்களையும், விளைபொருள்களுக்கு வேண்டிய நில அமைப்புகளையும், நில அமைப்புகளுக்கு நேரிடும் நோய்களையும் நோய்க்குதவும் மருந்துகளையும் மற்றும் நிலப் பண்ணுக்கு வேண்டுவனவைகளையெல்லாம் அனுபவச் சான்றுகளுடன் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். வேளாண்மை செய்வோர்களுக்கு அவைகள் தெரியவேண்டுவது அவசியம். அவ்விதம் தெரிவதற்கு அவைகள் அந்நிய மொழிகளிலிருப்பதால் நந்தாய் மொழியில் அவைகளை மொழிபெயர்க்க வேண்டியதும் அவசியமாகிறது. (தொடரும்)

கோகிலரங்கன்.

கரிசூழ்ந்தமங்கலம் திரு T. K. அரிஹரபுத்ர சர்மா அவர்கள்

முதல் அத்தியாயம்.

ஓர் பரிதாபமான நிலையும், திருடரின் சந்திப்பும்.

காடாந்தகாரமான இருள், இடை இடையே பளீர் பளீரென்னும் மின்னலிலொளி மகா பாவியாகிய இருள்தேவி சூழ்ந்து கொண்டாள். மழை ஓயவில்லை. உலகின் முடிவிற்கோர் அறிகுறியோ ? எங்கும் மழையின் ஓசை தவிர வேறொன்றுமில்லை. திடீரென்று ஒரு குரல்:—

கோகிலம்:— ஆ தெய்வமே! நான் என்ன செய்வேன்! வெகுதூரம் ஓடிவந்தும் பாவிகளின் இம்சை தீரவில்லையே! தொடர்ந்துவரும சப்தமும் கேட்கிறதே! எங்கு சென்று எவ்விடம் ஒளிவேன்! ஏ ஜெகதீஸ்வரி! பாரததாயே! அம்மணி! கல்யாண குணவல்லியே! உலகை காக்கும் தாயே அடைக்கலமென்று அண்டினவரை ஆதரியாது விடுவதழகோ? யான் என்ன செய்

வேன்! யாருக்கு தீவினை என்ன புரிந்தேன்! யாரை அநாதியாக்கினேன்? யாரை வீட்டை விட்டோட்டினேன்! யாரை இம்சைக்குள்ளாக்கினேன்! எல்லாத்தீவினைகளும் என்னைச்சூழ்ந்தனவே! மழைக்கொதுங்குவதற்குக்கூட இடமில்லையே! குளிரோ தங்கமுடியவில்லையே கால்கள் நோவுகின்றனவே, மனம் பதைக்கின்றதே. மழைக்கு ஒதுங்க ஒரு இடமுமில்லையே. குளிரோ சகிக்க முடியவில்லையே. தேக முழுமையும் முட்கள் தைத்திருக்கின்றனவே. ஹா!...... அம்பிகையே! நான் எதற்கென்றழுவேன்! நான் பெண்ணாகப் பிறந்ததற் கழுவேனோ! அருமையாக வளர்ந்ததை நினைத்து அழுவேனோ! தாய் தந்தையர்களை விட்டுப் பிரிந்ததற்கழுவேனோ! உடல் தான் வேறென நினைத்திருந்ததை பாமாக்கிய பாமனின் பகைமையை நினைத்தழுவேனோ! ஐயோ தெய்வமே இதுவும் என் தலைவிதி வசமோ! அடியாள்படும் துயரைபார்த்து சும்மாயிருப்பது நீதமாகுமோ! ஐயோ! இதோவருகிறார்களே! எங்கு செல்வேன்! ஈசா! பாவி! துரோகி! உன் மனம் குளிர்ந்தனவா! இன்னும் குறை என்ன இருக்கிறது! இன்னும் கடவுள்விட்ட வழிவிடட்டும்! இதோ தெரிகிற இவ்வழியே ஓடுகிறேன். என்று சொல்லிக்கொண்டே ஓட்டமெடுத்தாள்.

கருப்பணன்:— அண்ணே! எங்கே காணலையே! இங்கு தானே கண்டோம்.

சங்கரன்:— அடே! நீ சும்மாயிரு! அதோ சத்தம் கேட்கிறது.

கருப்பணன்:— எங்கடா! எந்த பக்கமடா? மனசை வச்சுப்பாரு?

சங்கரன்:— மனசை வைக்கவாவது எடுக்கவாவது இங்கில்லவேயில்லை.

கருப்பணன்:— இருக்கட்டும் நம்ம எசமானுக்கு என்னடா சொல்லறது.

சங்கரன்:— அதுக்குத் தாண்டாபயப்படரேன். காணுமப் போனுக்கே எங்கேயாவது ஓடிப்போய் புளைக்கவேண்டியது (தான்).

கருப்பணன்:— அங்கங்கே சண்டையும், சச்சாவும், கொலையுமாகயிருக்கிறதே? எங்கேடா ஓடறதடா?

சங்கரன்:— அதுக்குத்தான் என்னடா பண்ணறது என்று யோசனை செய்கிறேன், எல்லாத்துக்கும் சாமியை வேண்டிப் போமா?

கருப்பணன்:— அதாண்டா சரி! நானும் என் சாமியை வேண்டிக்கிறேன். ஏ உச்சினமாகாளியே! நீ உச்சிதமாய் வந்து என்னைக்காக்கவேணும். பகலெல்லாம் பதுங்கிக்கிடந்து இரவு பறந்தேகும் பத்திரகாளியே! பாவிமகன் புகனுவதைப்பார்த்துணாது பாவைபோல் நிற்கும் அம்மணியே! உன் பாதமே சரணம் தாயே! வீரியே! சூரியே! சூலியே! சாமுண்டீஸ்வரியே! சகல கலாவல்லியே! சத்ரு சங்காரியே! ரீங்காரியே! உனக்கு வேண்டியதைச் செய்து வைக்கிறேன். அசையாது அம்பாது ஆடு உயிரோடு பூசை செய்கிறேன். குடங்குடமாக கள்ளு சாராயங்கள் உனக்குக்காட்டிக் குடிக்கிறேன். என் மனசிலேயுள்ளதைத் தீர்த்தாக்கே நூறு ஆடு வெட்டி அபிசேகம் செய்து கும்பிடறேன். என்று சாமியை வேண்டிக்கொண்டு ஏய்! ஏய்! ஓட்டம் எடு! யாரோ வாரங்க இரண்டு திருடர்களும் ஓடிவிட்டார்கள். என்ன ஆச்சரியம்? இந்த ஸ்திரி யார்? இத்திருடர்கள் யார்? இத் திருடர்களின் எஜமானன் இம் மங்கையை கொண்டுவரும்படி சொன்ன காரணமென்ன? ஒன்றுமறியாத எனக்கு இதை பார்க்க எனக்குப் பரிதாபம் ஒரு பக்கம் சந்தோஷம் ஒருபக்கம். ஒன்றுமறியாத எனக்கு இஃதோர் ஆச்சரியமாயிருக்கிறது; மேல் நடப்பதை கவனிக்கிறேன்.

(தொடரும்)

திருக்குறள் மூலமும் உரையும்.

பாயிரம்.

௩. நீத்தார் பெருமை.

அஃதாவது யான் எனதென்னும் பற்றுக்களை முற்றும் விட்டவரது பெருமையைக் கூறுதல், கடவுளை வாழ்த்துதலால் உலகம் நடைபெறுதற்கேதுவாகிய மழையினது சிறப்பை இரண்டாவது அதிகாரத்தாற் கூறி, உலகம் நடைபெறத்தக்க முறையினை உள்ளவாறு அறிவிக்கும் முற்றத்துறந்த முனிவரது பெருமையை இம்மூன்றாம் அதிகாரத்தாற் கூறுதலின் அதிகார இயைபு பெறப்பட்டது.

உக. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

(இ-ள்.) தமக்குரிய ஒழுக்கத்தில் வழுவாது நின்று துறந்தவர் பெருமையை, மேலான பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே மேலானது என நூல்களைச் செய்தவரது துணிவு விரும்பும் (எ-று)

தமக்குரிய ஒழுக்கமாவது— தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஏற்றவாறு ஒழுகுதல். அவ்வாறு ஒழுக அறம் வளரும். அறம் வளரப் பாவந்தேயும். பாவந்தேய அறியாமை நீங்கும். அறியாமை நீங்க அழியும்பொருள் இது அழியாப்பொருள் இது என்னும் பகுத்தறிவு உண்டாம். பகுத்தறிவு உண்டாக அழியும் பொருள்களிடத்து வெறுப்பும் அழியாப் பொருளிடத்து விருப்பும் உண்டாம், அஃதுண்டாக அழியும் பொருள்பற்றிய முயற்சிகளனைத்தும் நீங்கி அழியாப் பொருளை அடைதற்குரிய முயற்சி உண்டாம். அம் முயற்சியால் மெய்யுணர்வு பிறந்து உடலையானென்னும் பற்றும் புறப்பொருளை எனதென்னும் பற்றும் நீங்கும். பனுவல் என்று பொதுப்படக்கூறிய அதனால் மாறுபட்ட சமய நூல்களனைத்துங் கொள்ளப்படும். படவே, யான்

னது என்னும் பற்று அறுதல் மேலானதென்பது சமயிகளனை வருக்கும் ஒத்ததுணிபு என்றவாறாயிற்று. நூல் செய்தவரது துணிபை நூல்மேலேற்றிக் கூறினர். (க)

உஉ. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

(இ-ள்,) யான் எனது என்னும் இருவகைப்பற்றையும்விட்டவரது பெருமைக்கு அளவுகூறுமிடத்து, இவ்வுலகத்துப் பிறந்தவரையும் இறந்தவரையும் இவ்வளவினர் என எண்ணி அளந்தால் அதனை ஒக்கும். (எ-று.)

இறந்தார் எனவே பிறந்தாருங்கொள்ளப்படுவர். பிறந்து இறந்தவரை அளக்கமுடியாதவாறுபோலத் துறந்தார் பெருமையையும் அளக்கமுடியாதென்பதாம். துணை—அளவு கொண்டால் என்றிருக்கவேண்டுவது கொண்டு என நின்றது. (உ)

உங. இருமை வகைதெரிந் தீண்டு அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

(இ-ள்) பிறப்பு இறப்பு என்னும் இரண்டனது துன்ப இன்பக் கூறுப்பாடுகளை ஆராய்ந்து அறிந்து அப்பிறப்பை நீக்குதற்கு இப்பிறப்பின்கண் துறவறத்தை மேற்கொண்டவரது பெருமையையே உலகின்கண் உயர்ந்தது. (எ-று.)

இருமையென்பது இரண்டு என்னும் எண்ணின்கண் நின்றது. பெருமை என்றவிடத்து ஏகாரம் விரித்துரைக்கப்பட்டது. அந்த ஏகாரம் அரசர் முதலாயினர் பெருமையைப் பிரித்தது. அறமென்றது அதிகாரத்தால் துறவறத்தைக் குறித்தது. (ங)

உச. உரன் என்னுந் தோட்டியான் ஓர் ஐந்துங்காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கு ஓர்வித்து.

(இ-ள்,) திண்மை யென்னும் அறிவாகிய தோட்டியால் ஐந்துபொறிகளாகிய யானைகளை அப்பொறிகள் செல்லுதற்குரிய

புலன்களிடத்துச் செல்லவொட்டாமல் தடுப்பவன் மேலான தென்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஓர்வித்தாவன் (எ-று)

தோட்டி, யானையை அடக்கும் அங்குசம், ஐந்து பொறிகளாவன-மெய், நாக்கு, கண், மூக்கு, செவி என்பன. மெய்-உடல். அவ்வைந்தும் செல்லுதற்குரிய புலன்களாவன—முறையே ஊறு சுவை, ஒளி, நாற்றம், ஓசையென்பன. வான்—மேல். வைப்பு—நிலம். வித்து, நிலத்தைச் சார்ந்து முளைக்குந்தன்மையுடையது. ஐம்பொறிகளை வென்றவன், முத்தி நிலத்தைச் சார்ந்து அழியாத இன்பத்தை நுகருவனாதலின், அவனை வித்தாகக்கூறினார். அவன் இவ்வுலகத்தில் பிறந்து இறந்து உழலான் என்பது கருத்து. உரனைத் தோட்டியாக உருவகஞ்செய்து ஐந்தை யானையாக உருவகம் செய்யாமையால் ஏக தேச உருவகம். (௪)

உரு. ஐந்து அவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார்
இந்திரனே சாலுங்கரி. (கோமான்

(இ-ள்) ஐந்து ஆசைகளையும் கெடுத்தவனது வலிமைக்கு அகன்ற தேவலோகத்துள்ள தேவர்களுக்கு இறைவனாகிய இந்திரனே அமையுஞ் சான்று. (எ—று.)

ஐந்தும் என்னும் உம்மையும், ஆற்றலுக்கு என்னும் குவ்வுருபும விரித்துரைக்க. ஐந்து ஆசைகளாவன—மேலே கூறப்பட்ட ஐந்து புலன்களிடத்துச் செல்லும் ஆசைகள். இந்திரன் ஐந்தாசைகளைக் கெடுக்காதவனாய் அகலிகையை விரும்பி ஐந்தாசைகளையுங் கெடுத்த கௌதம முனிவரால் சாபம் எய்தினான், ஆதலின் ஐந்தவித்தான் ஆற்றலுக்குச் சான்றாயினான். ஆற்றல்—சொல்லியவாறு ஆதல். கௌதமர் அகலிகையோடிருந்தும் பிறர் மனைவியை விரும்பாமையாலும், அகலிகையிடத்தும் தற்போத முனைப்புடன் கூடாது திருவருள் வசப்பட்டு நின்று கூடினமையாலும் ஐந்த வித்தவராயினர். அவித்தவனது ஆற்றல் அவியாதவனிடத்துச் சென்று காணப்படுமன்றி அவித்தவனிடத்துச் சென்று காணப்படமாட்டாது ஆதலில், அவித்தவனை விலக்குதற்கு இந்திரனே என்றார். (௫)

உசு. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(இ-ள்.) செய்தற்கு அரியவற்றைச் செய்வார் பெரியர். செய்தற்கு அரியவற்றைச் செய்யாது எளியவற்றைச் செய்வார் சிறியர். (எ-று)

செய்தற்கு அரியவை— இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எண்வகை யோக வுறுப்புக்கள். செய்தற்கு எளியவை—மனம் விரும்பியவாறு பொறிகளின் வழியாம் பொருள்களிற் சென்று விரும்புதல் வெறுத்தல் முதலாயின. (சு)

உஎ. சுவை யொளி யூறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

(இ-ள்) சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமும் என்று சொல்லப்பட்ட ஐந்தனது கூறுபாட்டை ஆராய்வானது அறிவினிடத்ததே உலகம். (எ-று)

உலகமானது, நீர், நெருப்பு, காற்று, வெளி, மண் என்னும் ஐந்தின் கூட்டமாகும். இவ்வைந்தும் முறையே சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்னும் ஐந்து தன் மாத்திரைகளில் நின்றுந்தோன்றி, சுவை முதலிய ஐந்து குணங்களையுடையனவாய் விளங்கும். ஆகவே, சுவை முதலிய ஐந்தும் நீர் முதலிய பூதங்கட்குக் காரணங்களாகவும் அப் பூதங்களின் குணங்களாகவும் இருவகைப்படும். காரணந்தன் மாத்திரை யெனப்பட்டு இந்திரியங்களுக்கு வலிமையை உண்டுபண்ணும். குணம் பூதங்களினிடமாகயிருந்து இந்திரியங்களால் அறியப்படும். எவ்வாறெனின், மண்ணின் குணமாகிய நாற்றத்தை மூக்கு அறியுங்காலத்து மூக்கினிடத்திருக்கும் இந்திரியத்திற்கு நாற்றத்தை அறியும் வலிமையை உண்டுபண்ணுவது நாற்றமென்னுந்தன்மாத் திரையாகும் இவ்வாறே பிறவுமாம். ஆகவே, சுவை முதலிய ஐந்தும அகத்துத் தன் மாத்திரையாயும் சூக்கும தேக அறிவுருபமாயும், புறத்

துப் பூதங்களின் குணங்களாயும் அறியப்படுவனவாயும் இருக்கு மென்பது பெறப்படும். இவ்வாறு சுவை முதலிய ஐந்தின் கூறு பாட்டை அறிபவன் எவனோ, அவன், ஆன்மாவாகிய தனக்கு இந்திரியங்கள் கருவியாமெனக் கண்டு அவற்றின் வசப்பட்டு மயங்கான் ஆதலின், உலகம் அவனை வசப்படுத்தமாட்டாது என்பது அறிவித்தற்கு தெரிவான் கட்டே உலகு என்றார். தெரிவான் என்றதனால் தெரிதற்கு வேண்டுங்கருவிகளைத்துங்கொள்ளப்படும். (எ)

உஅ. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(இ-ள்) நிறைந்த மொழியினை உடைய துறந்தாரது பெருமையை நிலவுலத்தின்கண் அவர் விதியாகச் சொல்லிய மொழிகளேகண் கூடாகக்காட்டும். (எ-று)

நிறைமொழி யென்பது சொல்லியவாறு பயன் செய்யும் மொழி. மறைமொழியென்பது நிறைமொழி மாந்தர் சொல்லும் விதிமொழி. விதியெனவே, விலக்கு மொழியும அடங்கும் வேதத்தில் விதித்தவற்றைச் செய்தவனுக்கு இன்பமும் விலக்கியவற்றைச் செய்தவனுக்குத் துன்பமும் பயனுதல்போல, நிறைமொழி மாந்தரால் சொல்லப்பட்ட மொழியும் மறைமொழியெனப்பட்டுப் பயன்றருதலின், மொழிகாட்டும் என்றார். காட்டி விடும் என்பது காட்டும் என்னும் பொருள் குறித்த ஒரு மொழி. (அ)

உகூ. குணம் என னும் குன்று ஏறிநின்றார் வெகுளி
கணம் ஏயுங் காத்தல் அரிது.

(இ-ள்.) நற்குணங்களென்னுங் குன்றின்மேல்நின்ற முனிவரது கோபம் இருப்பது கணமேயாயினும் கோபிக்கப்பட்டவரால் தடுத்தல்கூடாது. (எ-று.)

குணங்களாவன—யான் எனது என்னும் பற்று அறுதல், மெய்யுணர்தல், அவாவறுத்தல் முதலாயின. இக் குணங்களை

சலியாமையும் பெருமையும்பற்றி குன்றாக உருவகஞ்செய்தார். இக்குணங்களை உடையார் சலியாத பெருமையுடையாராயினும், பழைய வாசனைபற்றிப் பிறரிடத்துக்குற்றங்கண்டபொழுது கோபிப்பர். எல்லாம் இறைவன் செயலே யெனக்காணும் மெய்யுணர்வினால் அக்கோபந் தோன்றியபொழுதே அழிந்துவிடும். ஆதலின் கணமேயுமென்றும், நிற்பது கணப்பொழுதாயினும் நிறைமொழி மாந்தராதலின், அக்கணப்பொழுதில் கூறியவாறு ஆதல் தப்பாதென்பதுபற்றிக் காத்தல் அரிதென்றுங்கூறினார். (உகூ)

௩௰. அந்தணர் என்பர் அறவோர் மற்று எவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்.

(இ-ள்.). எல்லா வுயிர்களிடத்தும் செவ்விய கருணையை உடையாரயிருத்தலால் அந்தணர் என்று சொல்லப்படுபவர் துறவறத்தில் நிற்பவராவர். (எ-று)

அந்தணர் என்னும் சொல், அம் + தண் + அர் எனப்பிரிக்கப்படும். படவே, அழகிய தட்பம் உடையர் என்பது பொருளாகும். ஆகவே, அந்தணர் என்னும் பெயர் அழகிய தட்பம் இருத்தலால் வந்த ஏதுப்பெயராகும். தட்பம்—கருணை. எவ்வுயிரிடத்துங் கருணையுடையாராயிருத்தல் துறவறத்தில் நிற்போர்க்கு உரியது. ஆதலின், அறவோர் என்பது துறவறத்தில் நிற்பவரைக் குறித்தது. இனி அந்தணரென்பது ஒரு வகுப்புப் பெயராகவும் வழங்கப்படும். அவ்வகுப்பார், பிறர் வழிபட்டுப் பயன்பெறுதற்காக இறைவனைப் பூசிக்கும் ஆதிசைவரெனப்படுவர். இவர், தமக்கென ஒன்றையுஞ் செய்யாதவராய் பிறர்க்குச் செய்வதே தமக்குச் செய்ததாகக்கொள்ளும் சீலராதலின் துறவறத்தாரோடு ஒப்பர். அந்தணர் வேறு பிராமணர் வேறு. பிராமணர் மகா சைவரெனப்படுவர். (௩௰)

இவ்வதிகாரத்து முதலாவது செய்யுளால் நீத்தார் பெருமையே மேலானதென்பது நூல்களினது துணிவுஎனவும், உ-வது செய்யுளால் அவர் பெருமை அளவிடப் படாதெனவும், ௩-வது

செய்யுளால் அவர் பெருமை உலகின்கண் உயர்ந்ததெனவும், ௬-வது செய்யுளால் பெருமைக்கு ஏது ஐந்தவித்தலெனவும், ரு-வது செய்யுளால் ஐந்தவித்தலாலுண்டாம் பெருமைக்குச்சான்றுவார் இவரெனவும், ௬-வது செய்யுளால் பெருமைக்கு ஐந்தவித்தலோடமையாது யோகப்பயிற்சியும் உடையராதல் வேண்டுமெனவும், ஏ-வது செய்யுளால் அவ்விரண்டனோடு தத்துவவுணர்ச்சியும் உடையராதல் வேண்டுமெனவும், அ-வது செய்யுளால் அவர் வாக்கு அவர் பெருமையைக் கண்கூடாகக் காட்டுமெனவும், ௯-வது செய்யுளால் அவரிடத்துண்டாம், கோபம் இருப்பது கணப்பொழுதாயினும் கோபிக்கப்பட்டவரால் தடுக்க முடியாதெனவும், ௰-வது செய்யுளால் அவர் எவ்வுயிரிடத்தும் இரக்கமுடையரெனவுங் கூறினர்.

பொ. மு.

பிழை திருத்தம்:— முதலாவது அதிகாரம், 4-வது செய்யுள் விஷேடவுரையில் 14-வது வரியில், கட்டுப்பாடுடைய வுணர்ச்சி முற்றுணர் வென்பதை சிற்றுணர் வென்றும், கட்டுப்பாடில்லாத வுணர்வு முற்றுணர்வென்றும் சேர்த்துக் கொள்க. இரண்டாவது அதிகாரம் 17-வது செய்யுளில் விசேட உரையில் 4-வது வரியில் கடிதல் என்பதை தடிதல் என மாற்றிக் கொள்க.

குறிப்புகள்.

மது விலக்குப்பிரசாரமர்மம்.

கள்க்குடிப்பதால் கணக்கற்ற தீமை விளைகின்றதென்பது கட்க்குடியாளரே கண்டதொன்று. இதனை மறுக்கயாராலும் இயலாது. நமது அரசாங்கத்தார் மதுவின்தீமையைப்பற்றி மக்களிடம் பிரசாரஞ்செய்து மதுவிலக்குச்செய்ய ஏராளமான பணத்தைச்செலவு செய்ய கங்கணங்கட்டியிருக்கின்றனர். உண்மையில் மதுவால் மக்கட்குத் தீங்கு என்பதையுணர்ந்து அதனைநீக்க மூற்படுதாயிருந்தால் மதுஉற்பத்தியை தடுக்கவேண்டும். மதுவிற்பனை

யைத்தடுக்கவேண்டும். இங்ஙனமின்றி குடியாற்கேடு விளைகின்ற தெனக்கூக்குறல் போடத் தேவையில்லை. அதற்கெனப்பணத்தை வாரி இறைப்பதிற் பயனுமில்லை.

ஆப்கன் அரசரின் அரியசெயல்.

ஆப்கானிஸ்தானத்தில் புதிதாய் சக்ரவர்த்திபதவியை ஏற்றுக்கொண்ட அமீர் நாதர் கான் அவர்களால் செய்ய உத்தேசித்திருக்கும் சீர்திருத்தங்கள் பல. அவற்றுள், தம்முடைய இராஜியத்திற்குள் சாராய விற்கனை கூடாதென்றும் சாராயங் காச்சவுங் கூடாதென்றும் இவ்வுத்திரவை மீறி நடந்தால் கடுமையான தண்டனை விதிக்கப்படுவதோடு பறிமுதலுஞ் செய்யப்படுமென்றும் மதுபானஞ் செய்பவர்களை உத்தியோகஸ்தர்களாகவிருந்தால் உத்தியோகத்தினின்று விலக்கப்படுதலோடு கடுமையான தண்டனையும் விதிக்கப்படுமென்றும் அருமையான திருத்தம் ஒன்று அமைத்திருக்கின்றார். உற்பத்தி, விற்பனை,களை அறவே தடுத்து அதன்மேல் குடியர்களையும் தண்டித்தால் குடியால் வருங்கேடு ஒழியுமென்ற உண்மையையுணர்ந்த ஆப்கன் அரசரின் செயலன்றோ அரிய செயலாகும்.

பின்பற்றுவார்களா?

நமது அரசாங்கத்தார் "அடிதாங்க முடியாதவன ஆம் ஆம்' என்று சொல்வதுபோல் "மதுவிலக்கு" "மதுவிலக்கு" என நாட்டில் நாலுபக்கங்களிலும் ஏற்பட்ட கிளர்ச்சியால் வரும் அபாண்டமான பழியினைப் பொறுக்கமாட்டாமல் "மதுவிலக்குப் பிரசாரம்" எனப்பெயர்வைத்து அதற்கென அதிகப்படியான தொகையையும் ஒதுக்கிவைத்து ஆங்காங்கு குடியால் வருங்கேட்டைப்பற்றிப் பிரசாரஞ் செய்து வருகின்றனர். குடியால் வரும்கேட்டைக குடிப்பவர்களே நன்றாய் அறிந்ததொன்றாகும். ஆகையால் பணத்தை விரையமாக்காமல் மது உற்பத்தியைத் தடுத்தும விற்பனையைத் தடுத்தும் அதன்மேல் குடிகாரர்களைத் தடுத்தும் வேண்டுவன செய்ய ஆப்கன் புதிய அரசர் அமீர் நாதர்கான் அவர்களை இனியேனும் பின்பற்றுவார்களா?

கல்விப்பெருக்கைக் காண்டதெப்போ?

நமது நாட்டில் நூற்றுக்கு 95பேர் படியாதவர்களாக யிருந்துவருவது மிகவும்வெட்கக்கேடான காரியமாகும். கல்வித்துறையில் நமது அரசாங்கத்தார் அதிகக் கவனஞ்செலுத்தி வரவேண்டும். அதற்கு அதிகத்தொகையும்ஒதுக்கப்படவேண்டும். காலிபோர்னியாமாகாணத்தில் அம்மாகாண அரசாங்க வருமானத்தில் நூற்றுக்கு அறுபது பாகம் செலவுசெய்யப்படுவதுபோல் நமது அரசாங்கத்தார் கல்வித்துறையில் முனைந்துநின்று வேண்டுவன செய்யவிரும்புகின்றோம். நமது நாட்டில் முற்காலத்தில் கல்வியின் அவசியத்தை நன்குணர்ந்து அதனை அரசாங்கத்தின் மூலம் அமுலுக்குவரவேண்டிய சில சட்டதிட்டங்கள் அமைக்கச் செய்தனர். நமது அரசாங்கத்தில் கட்டாயச்சட்டம் மூலம் கல்வியைப்பெருக்குங்காலங் காண்பதெப்போ?

தபால் எலி.

நமது சந்தாநேயர்கள் அடிக்கடி பத்திரிகை வரவில்லையெனப் புகார் செய்கின்றனர். நாம் சந்தாதார்கள் விலாசம் எழுதிய பின்பும் சரிபார்த்து தபாலில் சேர்க்கின்றோம். அப்படியிருந்தும் காணமற் போகும் விபரம் நமக்கு விளங்கவில்லை நாம் தபால் இலாகா மேலதிகாரிகளுக்கு இதைப்பற்றி எழுதியிருக்கின்றோம். நேயர்களும் பத்திரிகை வெளிவரும் தேய்தி முதல் சாக்கிரதையாக தபால் சேவகரிடம் பத்திரிகை எங்கே எனக் கேட்டுக் கொள்ள வேண்டும். கிடைக்கவில்லையானால் உள்ளூர் தபால் அதிகாரிகளுக்கு விபரமாக எழுத வேண்டும். பத்திரிகை தவறுவதின் காரணம் தபாற்சேவகர்கள் மற்றவரிடம் கொடுத்து விடுவது தவிர வேறில்லை. நேயர்கள் சாக்கிரதையாக இருந்தால் பத்திரிகையைத் தபால் எலி தூக்கிக்கொண்டுபோய் பிறரிடம் சேர்க்காது. இந்த முறையில் அநுபவங்கண்ட சிலர் நமக்கு எழுதியிருக்கின்றனர்.

பிணுங்கிற் பிதற்றல்.

சுயமரியாதை இயக்கத்தினர் பிதற்லுக்கு பிணங்கில்இடங்கொடுத்தலாகாதென்றும் கவர்ன்மெண்டாரிடம் மனுச்செய்து அதன் மூலமாக அவ்வியக்கத்தைஒழிக்க முயற்சிக்கவேண்டுமென்றும் ஹிந்து மகாசபைசார்பில் தீர்மானிக்கப் பட்டதென்று பிணுக்கு கெஜட்டு மூலமாக அறிகின்றோம்.

தேனீ திரட்டியது.

ஜப்பான் தேசத்திலுள்ள கியோடோ என்ற நகரத்தில் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு புத்தர் கோவிலிருந்தது. கோவில் நெருப்பால் வெந்து போயிற்று. கோவிலை திருப்பிக் கட்டுவதற்குப் பல மாச்சாமான்கள் வேண்டியிருந்தன. அவைகளை கட்டிடத்தின் மேலேற்ற எந்தக்கயிறு போட்டுத் தூக்கினாலும் அஃது அறுந்து போய்க்கொண்டிருந்தது. மனிதர்களுடைய தலைமயிரானது அந்த மாச்சாமான்களை தூக்குவதற்குப் பலமாயிருக்குமென்று கண்டு, தலைமயிர் வேண்டுமென்று கோவில் அதிகாரிகள் விளம்பரப்படுத்தினர். உடனே நாலாயிரம் பெண்கள் முன் வந்து தங்கள் தலைமயிரைக் கத்தரித்துக் கொடுத்தனர். இவர்கள் ஆண்டவன் திருப்பணிக்காகத் தங்கள் அழகைத் தியாகஞ்செய்தார்கள். என்று ஸ்ரீமதி எம். இ. கஸின்ஸ் கூறுகின்றார்.

1870-ம் வருடம் ஜப்பான் தேசத்தை ஆண்டு வந்த மெய் ஜி சக்கரவர்த்தியார் கல்வித்துறையில் மிகவும் கேவலமாக விருந்ததை நீக்குவதன் பொருட்டு, ஜப்பான் தேசத்திலுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிருக்க வேண்டுமென்றும், எந்தக்குடும்பத்திலும் எவரும் கல்வி ஞானம் இல்லாதவயிராருக்கக் கூடாதென்றும், உத்திரவு செய்திருந்தார். காலிபோர்னியா மாகாணத்தில் அம்மாகாண அரசாங்க வருமானத்தில் நூற்றுக்கு அறுபது பாகம் கல்விக்காகச் செலவு செய்யப் படுகின்றதாம். நமது அரசாங்கமோ நூற்றுக்கு ஐந்து பாகம் கல்விக்காகச் செலவு செய்கின்றது.

நமது இந்திய நாட்டில் பண்டைய நாளில் கல்வியின் இன்றியமையாமையை நமது முன்னோர் நன்குணர்ந்து "எந்த மன்னர், தமது நாட்டுக் கல்விமான்களுக்குப் போதிய ஆதரவு கொடாமலிருக்கின்றாரோ அவருடைய நாடு முழுவதும் வறுமையால் வாடும்; அந்நாட்டு நிருவாகிகள், உத்தியோகஸ்தர்கள் முதலியோரும், வறுமையால் வாடுவார்கள்." என்று நூல்களில் எழுதி வைத்தனர்.

உலகாயுதக்கல்வி புகட்டப்பட்டால் உலகாயுத நாகரிகமே பழைய காலந்தொட்டு தெய்வநம் பிக்கையை அடிப்படையாகக் கொண்ட தெய்வீகக்கல்வியை நமது சிறுவர்களுக்கு ஆரம்ப முதல் போதிக்கப்பட வேண்டுமென்ற கொள்கை நமது இந்திய நாட்டில் அநுசரிக்கப்பெற்றுவ

ந்தது. இப்பொழுதும் இந்தியப் பிள்ளைகளுக்கு முதன் முதலில் கல்வி புகட்டப்படும்போது "ஓம்" என்று சொல்லிக்கொடுக்கப் பெறுவதன் நோக்கமும் இதுவேயாகும்.

சாராயம் அருந்து பவனுக்கு ஷரியத்தில் கண்டதண்டனை விதிக்கப்படும். ஆப்கானிஸ் தான இராஜ்யத்திற்குள் எங்கும் சாராய் விற்பனையேகூடாது. சாராயத்தைக்காச்சவுங்கூடாது. இந்த உத்திரவை மீறிஎந்த இடத்திலேனுஞ் சாராயம் உற்பத்தி செய்யப் பெறுமேயானால் அந்தஇடம் பறிமுதல் செய்யப்படுவதுடன், குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பெறும். மதுபானஞ்செய்யும் உத்தியோகஸ்கர்கள் வேலையினின்று விலக்கப்படுவதுடன் அதற்குரியதண்டனையும் அடைவார்களென்றுஆப்கானிஸ்தானத்தில் புதிதாய் சக்ரவர்த்திபதவியை ஏற்றுக்கொண்ட அமீர் நாதர்கான்செய்ய உத்தேசித்திருக்கும் சீர்திருத்தங்கள் அடங்கிய அறிக்கையொன்றில் காணப்பெறுகின்றது.

மேனாட்டில் தனவந்தர்க்குத்தரித்திரர் அடிமைபிறப்பால் உயர்ந்தவர்களுக்குத்தாழ்ந்தவர்கள் அடிமை, ஆண்களுக்குப் பெண்கள் அடிமை என்றுமூவகை அடிமைத்தனம் காணப்படுகின்றது. சிலர்மேனாட்டில் பிறப்பால் உயர்வுதாழ்வு உண்டோஎன்று சந்தேகிக்கலாம். ஜாதிவேற்றுமையின் முக்கியமான அம்சங்கள் உடன்உண்ணுமை, உடன் மணந்து கொள்ளாமை ஆகும். அவ்விரண்டு அம்சங்களும் அங்கு காணப்படுவதைச்சில வருஷங்களுக்குமுன் இந்திய சேனாதிபதியாயிருந்த ஸர்-ஓமூக்ரீபோன்ற பல ஐரோப்பியர்களும் ஒப்புக்கொள்ளுகினறனர்.

நஞ்சு வைத்திருக்கும் பாம்புக்கு நல்ல பாம்பு என்ற பெயரும் அதைக் கண்டவர்கள் அஞ்சுவதும் போல் மனதில் வஞ்சகம் வைத்துத்திரியும் மக்களுக்கு நல்லவர் களென்றபெயரும் அவரைக்கண்டால் அஞ்சுவதும் உலகவழக்கமாம்.

உலகிலுள்ள பொருள்கள் பலவற்றுள்ளும் உயரியபொருள் உயிரேயாகும். உயிரையும் உண்மையையும் சீர்தூக்கிப்பார்த்தால் உயிரினும் உண்மையே உயர்ந்ததென்பது உயர்ந்தோர் உள்ளக்கிடக்கையாம்.

இங்கிலாந்தில் ஜாதிப்பிரிவுகளும் உயர்வுதாழ்வுகளும் கருத்து வேற்றுமைகளும் காணப்பட்டாலும் "இந்தியா" என்றால்யாவரும் ஒன்றுபட்டுக் கருத்து வேருபாடுகளைப்பாராட்டாமல் ஜாதிப்பிரிவுகளைப் பாராட்டாமல்

தேனீ திரட்டியது.

யர்வு தாழ்வுகளைப்பாராட்டாமல் வாழ்வு நடாத்து வதுபோல் இந்தியர்கள் வாழ்வு நடாத்துங்காலம் வருவதெப்போ?

பலநூல்பயின்றபண்டிதனைப்பார்க்கிலும் மனநலம் மனஅமைதிபெற்றுவாழும் மனிதனேபெரியவன்.

பூனைக்கால் ஜான்ஜன்-இந்தியர்கள் சுய ஆட்சிபெற்று விட்டால் சில மாதகாலத்திற்குள் அவர்கள் மதுபானத்தீமையை ஒழித்துவிடுவார்கள்

பாபு ராஜேந்திரபிரசாத்- சுயராஜ்யத்தைஒருவர் கொடுக்க அதைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மனோபாவத்தில் இப்பொழுது இந்தியா இல்லை. பிறருடைய நன்கொடையாகக்கிடைக்கும் சுயராஜ்யம் சிறப்புடையதன்று.

ஒருவைத்தியர் காலராக்கிருமியைக் கொல்லுஞ்சக்தி எலுமிச்சம்பழச்சாற்றுக்கிருக்கின்றதென்றும், காலராபரவியுள்ள இடத்திலிருப்போர் அடிக்கடியாவது நாளொன்றுக்கு மூன்று வேளையாவது எலுமச்சம்பழச்சாற்றைப்பானமாகவோவேறு எந்தவிதமாகவோ அருந்தினால் காலரா நோய் அணுகாதென்றுகூறுகின்றார். விஷ சம்பந்தமான பொருட்கள் நரைமயிரைக்கறுக்கச் செய்யும் சாயங்களில் கலந்திருக்கின்றனவாம்.

இங்கிலாந்தில் வாரந்தோறும் 736431915 சிகரெட்டுகளை மக்கள் வாங்குவதால் ஆண்டுஒன்றுக்கு 33293999560 சிகரெட்டுகள் வாங்கப்படுகின்றதெனத்தெரியவருகிறது

இங்கிலாந்தில் "டைகர்" என்னும் பெயருடையபூனைஒன்று தெருக்கதவுகளைத் திறப்பதற்கு அக்கதவுகளில் அமைந்திருக்கும் மணியை எளிதாக அடித்துக் கதவைத்திறக்கும்படி செய்கின்றதாம்.

இங்கிலாந்தில் இருபதினாயிரம் வகையான சுருட்டுக்கள் விற்கப்படுகின்றனவாம்.

கேட்டாக்கு அருகேயுள்ள கிராமம்ஒன்றில் ஆறுபவுண்டு எடையுள்ள பெய்ததாம்.

நிலவுலக நிகழ்சிகள்

திராவிடன் பத்திரிகையின் நிலை:— திராவிடன் பத்திரிகையில் திரு. இராமசாமி நாயக்கருக்கு இருந்த சம்பந்தம் ரத்துச் செய்யப்பட்டுவிட்டதென்றும், திராவிடனை நடத்தும்பொறுப்பை திரு. ஜெயராம் நாயுடு ஏற்றுக்கொள்ளப்போகின்றாரென்றும் திரு. கண்ணப்பருக்குள்ள சம்பந்தமும் நீக்கப்பட்டுவிட்டதென்றும், திரு ஜெயராம் நாயுடுவுக்குத் திராவிடன் ஆபீசிலிருந்து வரவேண்டிய கடனுக்காகவே இம்மாறுதல் ஏற்படுகிறதென்றும் "தமிழ்நாடு" கூறுகின்றது.

மதுரை இராமனாதபுரம் ஜில்லா 4-வது அரசியல் மஹாநாடு நாளது டிசம்பர்மீ 24உ சனி ஞாயிறுகளில் சென்னை, ஜனாப். பஷீர் அகமத்ஸியித் எம், யல், ஸி அவர்கள் தலைமையில் திருமங்கலத்தில் மிகச் சிறப்புடன் நடைபெற்றது என காரியதரிசி அறிவிக்கிறார்.

மைசூர் பிராமணர்களின் அறிக்கை;— சமீபத்தில் மைசூர் சமஸ்தானத்தில் நடைபெற விருக்கும் சட்டசபைத் தேர்தலுக்கும் பிரதிநிதி சபைத் தேர்தலுக்கும் பிராமணர்கள் அபேட்சகராக நிற்கக்கூடாதென்றும் மைசூரில் ஜாதி வேற்றுமை ஒழிந்து ஒற்றுமையுடன் வாழ்வதற்கு இஃது ஒரு நல்ல வழியென்றும், நியாய புத்தியும் பரந்த நோக்கமுமுள்ள பிராமணரல்லாதார் கட்சியை ஒழுங்காகச் சமாதானத்துடன் நடத்திவருவதற்கு வேண்டிய உதவி புரிவோம் என்றும், மற்றவர்களும் உதவிபுரியவேண்டுமென்றும் சில பிரமுகர்கள் வெளியிட்டிருக்கின்றனர்.

வேளாளர் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழா சென்ற கார்த்திகைமீ 8உ சனிக்கிழமை ரிட்டயர்ட் போலீஸ் டிப்டி சூப்பிரண்டெண்டு திருவாளர் K. S. கற்பக விநாயகம் பிள்ளையவர்கள் தலைமையில் திருநெல்வேலி தெப்பக்குளத்தெரு தாயம்மை பெண்பாடசாலை கட்டிடத்தில் நடைபெற்றது.

தூத்துக்குடி முனிசிப்பல் செயர்மென் பதவி திருவாளர் சி. வ. நல்லபெருமாள் பிள்ளையவர்களுக்கு எதிர்ப்பின்றிக் கிடை

த்த மகிழ்ச்சியின்பொருட்டு தூத்துக்குடி வேளாள வாலிபர் சங்கத்தாரால் சென்ற கார்த்திகைமீ 1-உ இரவு சி. வ. கலாசாலைக் கட்டிடத்தில் விருந்துக் கச்சேரி நடைபெற்றது. அப்பொழுது பிள்ளையவர்கள் தேர்தலைப் பாராட்டி திருவாளர்களான வக்கீல் P. S. கந்தையா பிள்ளையவர்கள், வக்கீல் S. குமாரசாமி பிள்ளையவர்கள், வக்கீல் சங்கரசுப்பிரமணியபிள்ளையவர்கள், S. முத்துக்குமார பிள்ளை அவர்கள், ஆரோக்கியசாமி பிள்ளை அவர்கள், முறையே சிறிதுநேரம் பேசினார்கள், இறுதியில் பிள்ளையவர்கள் சங்கத்தாருக்கும், பிறருக்கும் வந்தனம் கூறினார்கள். திரு. பரமசிவ ஓதுவா மூர்த்தியால் தேவாரக் கச்சேரி நடத்தப்பெற்றது. இரவு சுமார் 10-30 மணிக்கு மங்களத்துடன் சபை கலைந்தது:

சைவ சித்தாந்த சபை—தூத்துக்குடி

இச்சபையின் 46-ம் ஆண்டு நிறைவு விழா, நிகழ் டிசம்பர் 28-29ஆம் (மார்கழித் திங்கள் 14–15ஆம்) நாட்களில் நடைபெறும். அவ்விழாவின் பேரவைக்கு சென்னை உயர்தர நீதி மன்ற வழக்கறிஞரும், சைவ சித்தாந்த மகாஜமாஜ கௌரவ அமைச்சரும், சித்தாந்தம் என்னும் அரிய பத்திரிகையின் ஆசிரியருமான சைவத் திருவாளர் ம. பாலசுப்பிரமணியமுதலியார் பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமை வகிக்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

மதிநுட்பம் நூலோடுடைய அறிஞர் பலர், சித்தாந்தம், தமிழ் இலக்கியம், ஒழுக்க முதலிய பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள் அன்றியும் சித்தாந்த சைவர்களின் முன்னேற்றம், தமிழ் மொழியின் வளர்ச்சி முதலியவற்றிற்குரிய தீர்மானங்களும் செய்யப்பெறும். அன்பர்கள் அனைவரும் வந்து விழாவினைச் சிறப்பிக்கவும், சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புறவும் வேண்டுகின்றோம். விவரமான நிகழ்ச்சிக் குறிப்பு காரியதரிசிகளிடம் பெற்றுக்கொள்ளலாம் என்று அமைச்சர் அறிவிக்கிறார்.

உ
சிவமயம்.

வேளாள னென்றுரைக்கும் விருரும் பத்திரிகை
தாளாண்மை யானடத்துஞ் சாதுரிய—மாளாத
வேண்மை பெரிதுடைய கேடில்லா மாமணியே
வுண்மை யரியனையாய் ஆய்.

திருவருட் சிறப்பால் உபய க்ஷேமம். யான் கல்லிடைக் குறிச்சிபுக்கு நவசாளரங்கள் இயற்றுவித்துக்கொண்டு நேற்றுச் செந்திற்பதிவந்து பத்திரிகை கண்ணுற்று இதனை எழுதினேன். பத்திரிகை முழுதும் வித்தியாசாலைக் கட்டடம் பூர்த்தியான பின்னர்த்தான் பார்ப்பேன். விஷயமும் அதன் பின்பு தான் எழுதியனுப்புத் தொடங்குவேன். புதுப்பத்திரிகையை மாத்திரப் பார்வையிட்டுவருகிறேன். பத்திரிகை அன்புடன் அனுப்பியதற்கு வந்தனம் உவந்துதந்தனம். "நன்றி மறவேல்" என்ற ஔவையார் திருவாக்கென் சித்தம் விட்டகலாது.

சுபம். பிறபின்.

கார்த்திகை ௴ 13உ சுவாமிநாத பண்டிதர்.

A. T. Ramalingam Pillai,
Retired Taluk Sheristadar, AUTOOR KUSBA.

அன்பார்ந்த ஐய,

தாங்கள் அன்பாலனுப்பிய "வேளாளன்" இதள் 1, 2, 4, வந்தன. நம்முடைய வேளாளர் சமூகத்தின் முன்னேற்றங்கருதித் தாங்களெடுத்துக்கொண்டிருக்கிற உழைப்பு, உலகமெலாம் பொன்போற் போற்றத்தக்கதென்பதிலையிலலை. ஆனால், தற்காலத்தில் இவ்வுலகிலனேக பத்திரிகைகள் தோன்றுவதும், மறைவதுமாயிருப்பதால், நூதனப்பத்திரிகையென்றால், யாரும் வெறுக்குமியல்புடையதாய்க் காணப்படுகின்றது. அவ்வியல்பை மாற்றும மருந்து, பத்திராதிபர்களின், விடாமுயற்சியும், குனறுஊக்கமும், மேற்கொண்ட கருமத்தில் யதார்த்த அந்தரங்க விசுவாசப்பற்றுமே இக்குணங்கள் இறைவன் தங்களுக்கு அருள்சுரந்து கிருபைபாலிக்குமாறு சிவபூஜா காலங்களில் அவனருளைச் சிந்தித்து வருகின்றேன். சமீபத்தில் அவடம் வருவதாலச்சமையம், சந்தாத்துகையை சமர்ப்பிக்கின்றேன்.

காரியதரிசிகளிலொருவரும் ஆங்கில வைத்திய நிபுணரும் ஸ்ரீ நெல்லையப்பர் தேவஸ்தான டிரஸ்டியுமான திருவாளர் P. K. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் அனுப்பியது.

வேளாளர் கல்வி அபிவிருத்தி சங்கம்,
திருநெல்வேலி.
15-வது ஆண்டு விழா.

தலைவர்;-திருவாளர். ராவ் சாகிப்,
K. S. கற்பகவிநாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
Retired Superintendent of Police. 23—11—29.

முகவுரை

அன்பே சிவம் அறிவே சிவம்
அவன் இன்னருளே புகலிடம்.

சீலமும் சிறப்பும் அமையப்பெற்ற அறிவுடையீர்! அன்புடையீர்! பண்புடையீர்! வேளாண்மரபுப்பற்றுடையீர்! சைவ சமயப் பற்றுடையீர்!

இச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் தங்கள் பெருந்தன்மைக்கியைய அடியேனை இப்பெரிய நிர்வாகத்தை வகிக்க விரும்பிய தருணம் நல்லறிவு சற்றுமில்லாத அடியேனுக்குத் தகுதி சிறிதுமில்லையென அறிந்தும் பேரறிவு மலிந்த எனது பழைய நண்பர்கள் விருப்பத்தினை தடுத்துரைத்தற்கேலாதவனாகி அதனை அப்பெரியார் கட்டளையாகக் கருதிக் கீழ்ப்படியலானேன் ஏனெனின் அஃது எனதறிவு விருத்தியாவதற்கோர் வழியென வுணர்ந்தேன். யான் அறிவை யறிய ஈண்டு வந்தேனேயன்றி அறிவு புகட்டவந்தவனன்று. இப்பணியிட்ட பெரியாருக்கும் சபையிலுள்ள சிவநேசப் பெருந்தகையாருக்கும் எனது அன்பு மிக்க வந்தனத்தை அளிக்கிறேன். அங்ஙனம் அளிக்குங்கால் உயரிய அறிவால் மிக்க எனது சகோதரிகளையும் மறந்தேனல்

ணன். எவ்வாறெனின் சீமாட்டிகளுக்கும் சீமான்களுக்கும் பேர்துப்படவே வந்தனுபசாரங் கூறினமையாலென்க. அம்மாதரசிகளன்றோ பண்டுமின்றும் நமது சைவ மரபினரது சன்மார்க்க நெறியினையும் அன்பின் நெறியினையும் நமக்குத் தாய்ப் பால் புகட்டினாற்போல் ஆதரவுடன் புகட்டிப் பிரியமுடன் வளர்த்த உயரிய தாய்மார்கள்.

இச்சங்கம் வேளாளர் கல்வி அபிவிருத்தி சார்பாயுள்ளது. இம்மாது சிரோமணியார் அவதாரமாகி இன்று பதினைந்தாவது ஆண்டு நிறைவுவிழாவன்றோ. அங்ஙனமாக சாரதா சட்ட நிபந்தனைக்கும் மேற்பட்டு சுயமே தன் காரியங்களைக் கண்ணுங் கருத்துமாக கருதுந் தகுதியுடையாராகினார் இவ் வடமையார், இதைக் கருதி நாமெல்லோரும் பெருமகிழ்ச்சியடைய அருகராகினோம். எங்ஙனமெனில் இதுவரை இப்பெண்மணியின பாதுகாப்பை வகித்துவந்த சீரிய பெரியார் கழிந்த பதினைந்து ஆண்டுகளாக அடைந்துவந்ததும், திரிகரண வாயிலாய் நமது அருமைச் சிறார் கல்வி நலமொன்றே கருதி தம் உடல் பொருள் ஆவி மூன்றையும ஒருங்கே தியாகஞ்செய்து வந்ததுமான பொறுப்பு ஒரு சிறிது குறைய நேருவது நோக்கியே அப்பெரியார் தன்னலங் கருதாது தமது முக்கிய கடமையென ஊக்கத்தோடும், உளமகிழ்ச்சியோடும் இதுகாறும் உழைத்த உழைப்பை யார்தான் அறியார், எவரே மதியார், யாரே மகிழாதார். இத்தருணம் அருமை பெருமை வாய்ந்த அப்புண்ணிய சீலர்க்கு இச்சபையோர் யாவரும் சிரமசைத்து, கரஞ்சேர்த்து, உளமகிழ்ந்து நன்றிபாராட்டுவதோடுகூட நீண்ட ஆயுளையும, தேக சுகத்தையும், குறைவற்றசெல்வத்தையும், குன்றாக்கருணையையும் அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக! அன்னார் புகழும் புண்ணியமும் எம்மால் எடுத்துரைக்கற்பாற்றோ? சிவமணங் கமழும் தமிழ்நாடுளளவும் மறக்கப்பாற்றன்று. அன்னாருக்கு நன்றியே பாராட்டுவோமாக.

நமது வேளாளர் கல்வியபிவிருத்தி மாதரசியின் நன்னோக்கங் கருதி புருடர்களன்றி பெண்மணிகளும் முன்வந்து மேலும்

மேலும் விருத்தியடையச் செய்யுங் கடமை அவர்களதே. ஆகவின் அவர்களுமிச்சபையிற் சேர்ந்து ஊக்கமுடன் ஆக்கங்கருதக் கடப்பாடுடையவர்களே. அவர்களுள் பெரும்பான்மையோர் முன்வந்துழைக்கப் பிரார்த்திக்கிறேன். அக்காலந்தான் நம் மரபினருக்கு நற்காலமாகும். சத்தியம் சத்தியம் சத்தியம்; நிற்க. பிறிதொரு விண்ணப்பமுமுண்டு. இச்சபையின் அபிவிருத்தியை புண்ணியமும் புருஷார்த்தமுமென்றெருங்கே கருதி ஈடுபட்டு வருஞ் சிற்சிலரேயன்றி அறிவும் ஆண்மையும் பொறையும் பொருளுமுடைய பெரும்பாலார் பெரிதும் பராமுகமாகவிருக்கிறார்கள். அது பரிதபிக்கத்தக்கதே. எனினும் அவர்களினிமேலாயினும் முன்வந்து உதவிபுரியுமாறு மன்றாடி வேண்டுகின்றேன். அத்தருணந்தான் நமது மரபினர் கல்வி விருத்தி அபிவிருத்தியடையுந்தருணம். அதுவுமித்தருணமே. ஏனைய குலத்தவர்கள் இந்நாட்டிலும் எந்நாட்டிலுமமேம்பாடடைய ஒரே நோக்கமாகத் தேடிவரும் வழிகளை அவர்கள் சற்று உற்று நோக்கின் உண்மை வெளியாகும். நம் சமூகம் ஏனைய சமூகத்தைவிடக் கணக்கில் மிகக் குறைந்ததே. நாம் ஊக்கத்திலும் உழைப்பிலும் சில காலமாக மெலிந்துவருகிறோம். சிறிது கண்விழித்து திருவருளை முன்னிட்டு பொது நன்மையைய உழைப்பு, தியாகம், தன்னை மறத்தல் (Service, Sacrifice. Selflessness) ஆய முக்குணங்களால் நோக்கி ஆற்றுவோமாக! அவ்வாறின்றேல் நம் மரபினர் பெரிதுந் தாழ்வடைவதில் சிறிதும ஐயமில்லை.

இனி வேளாளர் யாவர்? கல்வி யாது? என்பதைச் சற்று ஆராய்வோம.

> "மாறுகொடு பழையனூர் நீலிசெய்த வஞ்
> சனையால் வணிகனுயி ரிழப்பத் தாங்கள்
>
> கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
> குழியிலெழு பதுபேரு முழுகிக் கங்கை
>
> யாறணிசெஞ் சடைத்திருவா லங்காட்டப்ப
> ரண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப்

பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற்
பிறித்தளவிட் டிவளவெனப் பேசலாமோ"

"காராளரணிவயலி லுழுதுதங்கள் கையார
நட்டமுடி திருந்திலிந்தப்
'பாராளுந்திரவரசர் கவித்தவெற்றிப் பசும்பொன்
மணிமுடி திருந்துங் கலப்பை பூண்ட"
வோராலெண் டிசைவளர்க்கும் புகழ்வேளாளர்
ஏரடிக்குஞ் சிறுகோலாற் றரணியாளச்
சீராருமுடி முடியரச ரிருந்து செங்கோல்
செலுத்துவர்வே ளாளர்புகழ் செப்பலாமோ"

எனச் சந்தனுச்சாரியார்களுள் தில்லைவாழ் அந்தணரிலொருவ ராய கொற்றவகுடியிலெழுந்தருளிய உமாபதி சிவம் தாம் அருளிச்செய்த சேக்கிழார் புராணத்தில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

திருநெறித் தமிழ்நாடுய்யும்வண்ணம் பெரியபுராணம்செய்த சேக்கிழார் பெருமான் அவதரித்த மரபு வேளாளர் மரபு. அப்பெரியாரின் கல்வியறிவு வொழுக்கங்களையறிந்த அநபாயசோழ மகாராஜா அவரைத் தமக்கு முதன்மந்திரியாக்கி தனதாசுரிமைச் செங்கோலை ஒழுங்குபெறச் செலுத்திவந்தார். திருஞான சம்பந்தப் பெருமானை வணங்கி "அப்பரே" என்றழைத்த திருநாவுக்கரசரும் நமது வேளாளர் மரபிற் றிருவவதாரஞ் செய்தாரென்றால்நமது மரபின் பெருமை அளவிடற்பாலதோ. பாரனைத்தும பொய்யென முற்றத்துறந்த முழு ஞானிப்பட்டினத்துப் பிள்ளையும் நமது மரபில் உதித்த பெரியாரன்றோ! வேளாளர்பெருமை என்னே! என்னே! பொய் கண்டார் காணாப் புனிதமெனு மத்து வித மெய்கண்டதேவர் தரித்த மரபும் வேளாளர் மரபன்றோ! துறவு பூண்டும் அருளுடன் அறம நிறமபித் தவ அரசு செலுத்திவந்த நமது மடாதிபதிகளும அவ்வுயரிய மரபில் வந்தவர்களன்றோ! நிராமயதேயத்தேகிநிறை தாயுமானவர் அவதரித்த மரபும் வேளாளர் மரபன்றோ! அப்பெருமானும் அமைச்சுரிமை

பூண்ட சிவஞானியன்றோ! நாமும் அப்பெரியார் வழிவழிவந்த சிவநேசச் செல்வர்களல்லவோ! நமது உயர்வே உயர்வு! எம் மர்பினர்களும் மெய்தா நம் பெருமையே பெருமை! உமாபதி சிவம் கூறிய வேளாளர் பெருமை ஈண்டு நன்கு விளங்கும்.

(தொடரும்)

இயற்கையுணவு.

(முன் தொடர்ச்சி)

சென்னை திரு. கா. சிவசங்கர முதலியாரவர்கள்.

கல்கத்தா ஸ்டேட்ஸ்மென் செய்தித் தாளில் போல்டன் ஹெரால்ட் எழுதிய செய்தி.

"அரிசி, பட்டாணி, கீரைகள், வாதுமைப்பருப்பு, கோதுமை, வெண்ணெய், ஏடு, தேன் முதலியவைகளை உணவாக வுடைய இருபத்தொன்பது வயதான இராமமூர்த்தி நாயுடு என்னும் ஓர் இந்தியர் கீழே படுத்துக்கொண்டு பன்னிரண்டு குதிரை சக்தியுள்ள ஒரு மோட்டார்காரை தன் முழங்கிலும் தோளிலும் ஓடச்செய்தார்—அவருடைய மார்பின் மேல் ஒன்றரைடன் நிறையுள்ள ஒரு கருங்கல்லை வைத்து அதன் மேல் ஒரு பாறையை வைத்து அதை சம்மட்டியால் நொறுக்கினார்கள். இந்த மரக்கறி யுண்ணும் இந்தியரைப்போல் வேறு எந்நாட்டு மாமிசபட்சணி யாவது இதே காட்சிகளைக்காட்டமுடியுமா"

மாமிசமுண்ணும் மிருகங்கள் குறைந்த ஆயுளுடையவைகளே.

சூவிஸ்கெனுல் இன்ஜினியராயிருந்தடிலெசெப்ஸ்என்பார் அதில் வேலை செய்துகொண்டிருந்த மாமிசமுண்ணும் ஆங்கில தொழிலாளனைக்காட்டிலும், கோதுமையும் பேரீச்சம பழமுந்தின்று வாழும் அரேபியர் செய்த வேலைத்திறனைக்கண்டு தாமும் இறக்கின்ற வரை மரக்கறியுணவே கொண்டு வாழ்ந்தார்.

மற்ற நாடுகளில் மாமிசமுண்போரைக்காட்டிலும் கோடிக் கணக்கான இந்தியமக்கள் உடம்புரனிலும் உள்ள உரனிலும்

குறைந்திருக்கின்றார்களென்பது உண்மையே. இதற்குக்காரணம் அவர்களுடைய குறைந்த வருவாய். அவர்களின் மனைவிமக்களைக்காப்பாற்ற போதாமையே.

மாமிசமுண்ணும் மிருகங்களின் மலம் அதிக நஞ்சுள்ளதாகவிருக்கின்றது. மரக்கறியுண்ணும் மிருகங்களின் மலம் நஞ்சற்றதாக விருக்கின்றது. மாமிச உணவுமலச்சிக்கலையுண்டாக்குகிறது. அந்த மலச்சிக்கல், பித்தம், தலைவலி, அக்கினிமந்தம், தூக்கமில்லாமை, சொறிசிறங்கு முதலிய நோய்களுக்கு காரணமாயிருக்கிறது. பெரும்பாலும் மாமிசத்திற்காக கொல்லப்படும் மிருங்கள் காசரோகமுடையவையாயிருக்கின்றது—மாமிச முண்போர் குடலில் கோய்க்கிருமிகள் அதிகம் உண்டாகின்றன.

பிளவை நோய் மாமிசமுண்ணுவோர்க்கே வருகிறது:—

ஆடு 6800க்கு 1, குதிரை 2100க்கு 1, மாடு 358க்கு 1, மனிதன் (மாமிசம்) 206க்கு 1. எலி 5க்கு 1, வாலில்லாக் குரங்கு ஒன்றுகூடயில்லை.

ஆஸ்திரேலியாவில் 300000 பேர் பிளவை நோயால் வருந்துகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் 75000 பேர் பிளவை நோயால் இறக்கின்றார்கள்.

நாய்கள் 8 வயதிற் தட்பட்டவை நான்கிலொரு பங்கு பிளவை.
12 ,, ,, மூன்றிலொரு பங்கு பிளவை.
14 ,, ,, இரண்டிலொரு பங்கு பிளவை.

மாமிசமூண்ணாதவர்க்கு குடற் கட்டியும், பிளவை நோயும் வருவதில்லை. மது சாரத்தால் உண்டாகும் தீங்கைப்போலவே மாமிச்சாரமும் தீங்கை விளைவிக்கின்றது. நியூயார்க் என்னும் வயித்தியநிபுணர் முசல்களுக்கு மாமிசம் கொடுத்து பரீட்சித்தார். மாமிச வுணவு இரத்தக் குழாய்களைமுட்டாக்கிகெடுத்து முயல்களைக் கொன்றது. மாமிச உணவு கொள்ளும் உயிர்களுக்குஇரத்தக் குழாய் களும்குண்டிக்காய்களும் சீக்கிரத்தில் நோயடைந்து கெட்டுப்போகின்றன.

மாமிசமுண்ணா மிருகங்களுக்கு வயது நிறைவு.

மரக்கறி.

முசல் 7முதல் 10வரை, ஆடு 10, வெள்ளாடு 10, எருது 15, குதிரை 25-40, மான் 30 கழுதை 30-40, ஒட்டகம் 50-100. யானை 100

மாமிசம்;

நரி 10, நாய் 15-20.

மாமிசம் உண்ணாத மேனாட்டறிஞர்கள்.

மிக அபூர்வமாய் மாமிசம் உண்டவர்,—

1 எடிசன், 2 வெண்டல் பிலிப்ஸ், 3 பிரான்சிஸ் ஆர்க்காட், 4 எமர்சன், 5 தோரியா, 6 மார்கரெட் புல்லர், 7 ஹோரஸ் கிரீலி 8 பிதாகரிஸ் 9, லார்ட் பைரன், 10 சைரஸ் மன்னர், 11 ஜீலியஸ் கெசர், 12 சாக்ரடீஸ், 13 டாலாடோ, 14 டாரபைரி என்கிற ரோமன் சக்கிரவர்த்தி, 15 காடியா (பிரெஞ்ச் நிபுணர்), 16 செனீகா (ரோமன் தத்துவ ஞானி), 17 பிரதர்டன், 18 கானல் தாம்சன், 19 ஐசக் நியூடன், 20 கவுண்ட் டால்ஸ்டாய், 21 ஹான்ஜான் பையிஜலோ, 22 வில்லியம் குல்லன் பிரையிஸ்ட், 23 ஸடீபன் ஸ்மித், 24 ஜார்ஜ் பெர்னாட்ஷா, 25 ஊடிங்யாங் (சீன மந்திரி), 26 ஷெல்லி, 27 ஆர்மீனியர், 28 டென்டன், 29 பாரகிழவர், 30 சில்வஸ்டர் கிரஹாம், 31 மேட்காட், 32 டாக்டர் வில்லியம் ஆல்காட், 33 சைரஸ்

“திருமகள் கடாட்சம்”

பாளையங்கோட்டை திரு. C. B ஆநந்தம் அவர்கள்

என் கனு உலகு

நான் ஒரு நித்திய தரித்திரி. எனக்கு உலகம் சாரமாகத் தோன்றுது. எடுத்த காரியங்கள் எவையும் வெற்றிபெற்றதென்பது என் ஜீவிய சரித்திரத்தில் கிடையாது. தோல்விமேல் தோ

ல்வி; கஷ்டத்தின் மேல் கஷ்டம். இவற்றால் சூழப்பட்ட எனக்கு உலகம் வெறுப்பாகத்தோன்றுவது ஒரு ஆச்சரியமல்ல. இந்த வெறுப்பிற்கும், துறவின்பால் பட்ட வெறுப்பிற்கும், மிகவும் பெரிய வித்தியாசமிருக்கின்றது. என வாழ்வில் எதிர்ப்பட்ட எண்ணிறந்ததான எழுதித்தொலையாத ஜீவிதகாலத்தீமைகளை நான் மிகவும் பொறுமையுடன் சகித்துவந்திருக்கின்றேன் என்பது என்னுடைய தீர்க்கதரிசனம்-சகிக்கமுடியாத இந்தத்தீமைகளின் பலமாகத்தாக்குகள் என் மனக்கோட்டையை அநேகமாகத்தகர்த்துவிட்டதென்னலாம். நம்பிக்கை என்னும் நாதம் பூராவாக அடங்கிப்போயிற்று; எதிலும் சந்தேகம்; உலகின்தோற்றம் ஒருபொய்யேபோலக்காண்கின்றது. நான் இன்னும் முதிராத வாலிபனாகவிருந்தும் என்னிலுள்ள இளமைஇருந்த இடந்தெரியாமல்போய் இன்னும் பல ஆண்டுகளுக்குமேல் வரக்கூடிய கிழத்தனம் என்னை சரியாக அலங்கரித்தது. மன எழுச்சியின்றி, யாதொரு சுறுசுறுப்புமற்று மிகவும் தளர்ச்சியுடன் ஒரு நாள் என் தரையிலுள்ள ஒரு சாய்மான நாற்காலியின் மீது சிந்தனு சக்திகளெதுவுமின்றி சாய்ந்து கிடந்தேன். அப்பொழுது பிற்பகல் மூன்று மணி யிருக்கும். "எப்பொழுதும் கவலையிலே இணங்கியிருப்பான் பாவி" என்றபடி சதாவும் கவலையாகின்ற சாகரத்திலே ஓய்வொழிவின்றி தத்தளித்துக்கொண்டிருக்கும் என் மனம் சிறிது ஒய்வுபெறத்தீர்மானித்தது. எனினும், அதன் அலைச்சல் மூன்னையினும் பன்மடங்கு அதிகமாய்த்தானிருந்தது. ஆனால், நான் மாத்திரம் இன்று சிறிது முன் ஜாக்கிரதையுடன் விலகிக்கொண்டு, தூர இருந்து பார்த்துக்கொண்டிருக்கலானேன். இவ்வளவுதான், என் மனத்தின் கதி எனக்குத்தெரியாது. அதன் தொந்தரவற்று சுகமாகவிருந்தது என்று கூறலாம்.

நாகரீகம மிதந்த பட்டணம்; இதில் ஒரு வீதி; அது பிரபுக்களுடைய மாளிகையால் வெகு சோபிதமாக விளங்குகின்றது. அவ்வீதியின் கோடியில் ஒரு சாதாரணக்குடியானவன்; அவன் ஒரு பெருங் குடும்பி; பதின்மூன்று எண்ணங்களின் தலைவன்; அவர்கள் அனைவருக்கும் அவன் ஒருவன்தான் வாசினம்; மற்ற

வர் யாவரும் (திண்ணை சோம்பி) செலவினம் பாவம்! என்ன செய்வான்! என்னைத்தான் உலகிலேயே பெரிய தரித்திரன் என்றிருந்தேன். குபேரபட்டணம்போல் விளங்கும் இந்தச்சீமையிலும் மாபெருந்தரித்திரியான ஒரு பெருங் குடும்பியைக்காண எனக்கு ஒரு அதிசயமாகவே யிருந்தது.

சிறிது தூரம் சென்றேன். அங்கு பெரிய தோர்சாலை, வண்டிகளின் போக்கு வரத்தும், ஜனங்களின் நடமாட்டமும் அதிகமில்லாத நடுப் பகலாக விருந்தது. அந்தச்சாலையின் ஓரம் ஒரு அழகிய ஸ்திரீ நின்று கொண்டிருந்தாள். இயற்கையின் திருவெலாம் ஒரு உருவெடுத்த தொப்ப அவ்வனிதைதோற்றினள். அவளது சோபை தெய்வத்திருவனைய்பேரழகுடன் நம் மனத்தை உருக்கவல்லதாகவிருந்தது. விகாரமற்ற அழகுலாவண்யம் எவரையும் (பர)வசப்படுத்தவல்லது. இத்துணை எடுப்பும் இணையுமற்ற இம்மாதரசி தனது இடுப்பில் பரிதியின் ஒளி பழிக்கும் சோபை மிகுந்த ஒரு குழந்தையை வைத்திருக்கின்றாள்.

அவ்ளை அணுகி "அம்மா, நீ யார்" என்றேன். அதற்கவள். தன்னை வருந்தி வேண்டுவார்பால் செல்லும் செல்வி யென்றாள் "இங்கு உன்னை வருந்தி வேண்டியது யார்?" எனக்கேட்டேன் அதற்கு அவள் "அப்பா, இந்தச்சாலையை அடுத்துள்ள ஒருநகரில் ஏழைக்குடும்பி யொருவன என்னைவருந்திவேண்டியிருக்கிறன் என்று கூறிவிட்டு நகரை நோக்கி நகர்ந்தாள். நானும் அவளைப் பின்பற்றிக்கொண்டே சென்று "இந்தக்குழந்தை யார்?" என்கவும் அவள், "இது என் சகோதரியின் புதல்வன்; இவன் பெயர் அகம்——தை-; இவன் மாட்டு எனக்கு மிகவும் அத்யந்தப்பிரியமுண்டு. ஏனெனில், இவன எனக்கு ஒவ்வொரு சமயங்களில் மிகவும் பெரிய உதவிகள் செய்துவருகின்றவன்" என்றாள்.

இதற்குள் முன் நான்பார்த்த குடியானவன் வீட்டின்பக்கல் வந்ததும், அவள் அதனுள் நுழைந்தாள் அங்கு உள்நுழைந்தவளை யாவரும் வரவேற்கவில்லை. பின்பு அவ்வனிதை சென்ற

தும் அவனைப்பார்க்க முடியவில்லை. உள்தான் இருப்பதும் நான் அறியக்கூடாததாகவிருந்தது. சிலபொழுது மிகவும் வேகமாய்ப் பறந்தது.

ஏழைக்குடும்பிக்கு அவன் பழயநிலைமை மலையேறிவிட்டது. பெரிய பிரபுவாக, மிகவும் கண்ணியமாக இராஜமரியாதையில் வாழ்கின்றான். வடிவத்தில் இதுகால் சுட்டமுகனுக்குத் துலங்குகின்றான். அவன் மக்களும் மிகமேதைகளாக வளர்கின்றனர். அவன் மனைவி ஒரு அரசியைப்போல விளங்குகின்றாள். இவன் உயரிய ஆசனத்து உட்கார்ந்திருக்கின்றான். பலர் இவனது ஏவலை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். இவனது உயர்ச்சியின் உச்சிவீற்றிருக்கையைக்கண்டு ஒரு விநாடி மிகவும் திகைத்துப்போனேன். ஆனால் அவன் துயர் துலங்கலாயிற்று. நானவற்றை என்னவென்பது அன்றுகண்ட பெண்மணியின் அகம்-தை ஆகிய குழந்தை அவனிடத்தில் களியாடுவதைக் காணலானே . அந்தக்குழந்தை மிகவும் சோபையுடன் விளங்குகின்றது. அது அவன் மடிமீது தன்னிருகால்களையும் நிறுத்தியவாறு தன் வயிற்றால் அவனது முகத்தை மூடிக்கொண்டது. அவனால் எந்தப் பக்கமும் நகரவியலாது; அவனால் அக்குழந்தையை அகற்றவும முடியாது. ஏன்? அது அவனை மூடிக்கொண்டிருக்கின்றதென்பதை அவன் அறியவேயில்லை. கால்களும், கைகளும் அவனது சுயேச்சையில் இருக்கவில்லை. கண்கள் திறந்திருக்கின்றதெனினும், தன்னைச்சுற்றியுள்ள வர்த்தமானங்களைக கவனிக்கமுடியாதவாறு அவை இருக்கின்றன. செவிகள் துலக்கமாகவிருந்தும் எந்த நாதமும் அவற்றால் கிரகித்துக்கொள்ளப்பெறுவதாகத்தோன்றவில்லை. அவனது நா-வளம் குறைந்துவிட்டது. அநேகமாக அவனது நிலை (சாகாதபிரேத) சுபாவத்துடனிருந்ததென்பது மிகையாகாது. (தொடரும்.)

உள்ளத்தனையது உயர்வு.

பேட்டை, திரு. வா. இராமலிங்கம் பிள்ளையவர்கள்.

உலகவாழ்வில் மக்கள் நன்மை தீமை என்பனவற்றின் தன்

மை பிரித்துணர்ந்து கொள்ளுவன கொள்ளவும், தள்ளுவன தள் ளவும் தக்க கருவியாயுள்ளது அறிவு. அவ்வறிவினுல் உணர்த் தப்படுவனவற்றைத் தன்னுள் கொண்டு அவ்வப்போது நடை முறையில் செலுத்த வல்ல தன்மையுடையது உள்ளம் எனப் படும். எனவே ஒருவனது வாழ்க்கை ஒழுக்கமானது அவனுள் அமைந்த உள்ளத்தின் தன்மைப்படியேதான் நிகழும் என்பது பெறப்படும். இவ்வாறு வாழ்க்கையின் ஒழுக்கத்தைவகைப்படுத் தும் இயல்புடைய உள்ளம், கள்ள உள்ளம், வெள்ளை உள்ளம், என இருவகைப்படும். கள்ள உள்ளமாவதுகபடுஅதாவது வஞ்சம் நிறைந்த உள்ளம். நல்லவை செய்வது போன்று அல்லவை செய்தொழுகும பொல்லாத உள்ளமாம். குற்றமுடைய உள் ளத்துக்கு எவ்வாற்றாலும் ஏற்றமில்லை.

"வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப்படின்"

உள்ளத்தில் குற்றமில்லாதிருத்தலின் அளவினதே அறமெனப் படும். மற்று குற்றமுடைமையோ! எத்துணை நன்மைபோலத் தோற்றத்தில் காணப்படினும் போற்றத்தக்கதன்று.

"மனத்துக்கண் மாசில னாதலனைத் தற
னாகுல நீர பிற" (குறள்)

கள்ள உள்ளமுடையார் எல்லோராலும் எள்ளப்படுவரன்றி நல் லாருள் ஒருவராய்க் கொள்ளப்படுதலின்று.

வெள்ளை உள்ளமாவது களங்கமற்ற தூய்மையான உள்ளம் அதாவது உள்ளொன்று புறமொன்றின்றிச் சொல்லும் செயலும் ஒத்து நிகழும் தன்மையது. உள்ளும் புறமு மொத்த தன்மை உலகம் பெரிதும போற்றும்.

"........உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்........"

என்ற ஆன்றோர் வாக்கு உற்றுநோக்கத்தக்கதாகும். தூய உள் ள முடைத்தாதற்கு வாய்மை மேற்கொண்டொழுகல் இன்றி யமையாதது.

"புறந்தூய்மை நீரானமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்." (என்பது குறள்)

இனி அகத்தூய்மை உடைமைக்குப் புறத்தூய்மை மிக அவசியம் "வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை" என்பது முதுமொழி. அழுக்கற்ற தன்மைக்கே வெள்ளை எனபது. எனவே அழுக்கற்றதன்மையர்க்கு இழுக்குற்ற சிந்தையில்லை என்பதாம். இப்பழமொழியின் தன்மையை உழவுக்கோ, அல்லது வேறு உழைப்புக்கோ மாடு கொள்வோர் ஏனைய மாடுகளிலும் வெள்ளை, மயிலை, மாடுகளையே கள்ளமின்றி உழைக்கத்தக்கனவெனக் கொள்ளும் வழக்கத்தால் இனிதுணரலாகும். தெள்ளிய தூய உள்ளமுடையார் எப்பொழுதும் பிறர்க்குபகாரம் செய்வதில் பெரிதும் விருப்பமும் ஊக்கமுமுடையராவர். உபகாரச் செய்கை மிகுந்து விளங்கவே அனைவராலும் உரிமையுடன் போற்றப் பெறுவர்.

"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம்
முள்ளத்தனைய துயர்வு"

என்பது தேவர் திருவாக்கு. பிறர்க்குபகாரப்படத்தக்கதாகிய நீரானது மிகுதிப்பட மிகுதிப்பட அதனுள் அமைந்த மலரானது நீண்டு வளர்ந்து மேலும் அழகுபடுத்தும். இவ்வாறே உபகாரக் குணம் மிகுந்த உள்ளமுடையார் அவ்வுபகாரக் குணம் அதற்குக் காரணமாகிய உள்ளத் தூய்மையும் பெருகப் பெருக யாவராலும் உயர்வாகக் கருதிப் போற்றப்படுவர். உபகாரச் செயல் மிகுந்த காரணத்தாலேயே "வேளாளர்" என்ற பெயர்பெற்ற வகுப்பினர்க்கே இவ்வுள்ளத்தாலாய உயர்வு சிறப்புடைமை எனலாம். இக்காலம் எல்லோரும் ஒத்த தன்மையோடு உலவவேண்டுமென விரும்பும் ஒவ்வொருவரும் ஏனைய பட்டங்களைக் கொள்ளக் கருதாது வேளாளர்க்குரிய பட்டமாகிய "பிள்ளை" என்பதையே கொள்ளக் கருதுவதும இதற்கோர் ஏற்ற சான்றாகும்.

ஆகவே அறிவால் உயர்வு பெறக் கருதுவோர் அனைவரும் முதற்கண் தத்தம் உள்ளத்தைக் கள்ளமின்றி வெள்ளையாக்கிக் கொள்ளவேண்டுவது மிக அவசியமாகும்.

கோகிலரங்கன்.

கரிசூழ்ந்தமங்கலம் திரு. T. K. அரிஹரபுத்ர சர்மா அவர்கள்

இரண்டாம் அத்தியாயம்.

ஆச்சரியமான சம்பவமும், ரங்கனின் யோசனையும்.

சாயங்காலவேளை மணி ஆறரை மணிக்கு இன்னும் ஐந்து நிமிஷங்களிருக்கின்றன. அவ்விடத்தில் ஒரு யௌவன பூமான் அதி வேகமாகச் செல்லுகிறான். எங்கென்றறிவோம். மேற் சொன்ன வாலிபன் ஓர் ஆலயத்தின் தென்புறம் உள்ள ஓர் உத் யாவனத்திற்குள் நுழைந்தான். அதற்கு நாலு பக்கங்களிலும் அழகிய மதில் சுவர்கள் உண்டு. தோட்டத்தின் அழகை பின் வருமாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

புன்னை மரங்களென்ன, தென்னை மரங்களென்ன. மாதுளை, கொய்யா எலுமிச்சை, மா, பலா, அகில், ஷண்பகம், பாரிஜாதம், கொன்னை, ஆவளி, பிச்சி, மந்தாரை, ரோஜா, இருவாட்சி, நந்தி யாவட்டை, துளசி, பச்சை, தெத்தி, முதலிய புஷ்ப செடிக ளும் கூடிய நந்தவனத்திற்குள் பளிங்கு கற்களால் அமைக்கப் பட்ட ஒரு சிறு ஹால் உண்டு. அவற்றுள் செல்வதற்கு படிக் கட்டுகள் உண்டு. அதன் இரு பக்கங்களிலும் பூச் செடிகளை சட்டிகளில் வளர்க்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. அவைகளின் இளந் தென்றலின் மகிமையை நன்குணர்ந்து வருபவர்களின் மன தைச்சந்தோஷமடையுமாறு அமைக்கப்பட்டிருந்தது. உட்சென்ற வாலிபன் நாற்காலியை மேஜையின் பக்கமிழுத்துக்கொண்டு மிக வும் ஆனந்தத்துடன் வெகு உல்லாசமாக அமர்ந்தான். தனக குள் ஏதோ ஒரு ஆலோசனை செய்பவன்போல் பின்வருமாறு சொல்லத் தொடங்கினான்:—

ஏ! சச்சிதானந்த பரம்பொருளே! அரிது! அரிது! மா னிடராவது அரிது! கூன், கூருடு, ஊமை, செவிடு, முடம், முதலியதில்லாமல் இருப்பதுமரிது! அம்மானிடர்களுள் என் ஜென்மமோ மிகவும் சிறந்தது. சுகம் துக்கம் இரண்டுட ஒன்

றின்பின் ஒன்றாக சதாகாலம் என்னைச் சூழ்ந்திருக்கின்றன. அம்மையில் என் சிற்றன்னை, தான் பெற்ற பிள்ளைபோல் பாவித்து நடத்தும் குணத்தையும், நான் வருங்கால் ஆசையுடனழைக்கும் அன்பையும், சமீபகாலத்தில் தான் பெற்ற பிள்ளையைப் பறிகொடுத்தும் வருந்தாது என்னிடம் முகங்கோணாதிருக்கும் நன்மையையும் யோஜிக்க ஆநந்தமாகின்றன. ஆனால், ஆம்மா! நினைத்த மாத்திரம், ஐயோ! ஜெகதீசா! நான் என்ன செய்வேன்! என்னைச் சூழ்ந்திருக்கும் சுகங்கள் நொடிப் பொழுதில் காத தூரம் விலகுகின்றன. துக்கமென்னும் வியாதி என்னை சூழ்ந்திருக்கின்றவே. என் மனமாகிய கோவிலில் அடைக்கலமாகப் புகுந்த எண்ணத்தை நினைக்க என் அருமைக் குழந்தாய்! ராஜம்! அதனால் உன் உயிருக்கு ஹானி ஏற்பட்டபோதிலும் அவ்வெண்ணத்தை மறக்காதே! அதற்கு விரோதமாக செய்யாதே! அன்று இறக்குங்கால் என் அன்னை சொன்ன சொல் இப்பொழுதுதான் என் ஞாபகத்திற்கு வருகிறது. நான் அதை எவ்வாறு மறப்பேன்? அல்லும் பகலும் என் மனதை வருத்தப்படுத்துகிறது. நம் வினை நம்மைவிட்டு ஒருக்காலும் விலகாது. அவரவர் வினையை அவரவரனுபவிக்கவேண்டுமேயொழிய மற்றவரெவரும் அனுபவிக்க முடியாது. என் துர் அதிர்ஷ்டத்தை நினைத்து வருந்துவது வீண். வரும் விதி வந்தே தீரும். எல்லாவற்றிற்கும் ஈசன் ஒருவரிருக்கிறார். அவர் எவ்வழி விட்டாலும் சரியே என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே திடீரென்று ஜன்னலின் கம்பிகளின் வழியாய்ச் சட்டென்று காந்த ஒளியைப்போல் ரொம்பவும் மெல்லியதாய் மூன்றுதரம் வெளிச்சமுண்டாயின. அத்துடனே வெங்காய வெடியென்னும் சிறு வெடியின் சப்தம் போல் மூன்றுதரம் சப்தமுண்டாயின. ரங்கன் ஒன்றுமறியாத வனாய்த் திகைத்து நிதானமற்றுவிட்டான். சற்று நேரம் திகில் கொண்டிருந்தான். பின்பு ஒருவாறு நிதானமடைந்து இச்சப்தமும், இவ்வொளியும் என்னமாயிருக்கிறது? ஜெகதீசா! நீயன்றி எனக்கிங்கு யார் துணை? ஐயோ! நான் என்ன செய்வேன்? இவ்வுலகில் எனக்கு விரோதிகளொருவருமில்லையே! ஆகாயம

மேக சஞ்சாரமென்பது அணுவளவுமில்லாது நிர்மலமாயிருக்கிறது. ஒளியும், ஓசையும், மின்னலோ, இடியோ, என நினைக்கக் கொஞ்சங்கூட இடமில்லை. விரோதிகள் எவர்களாவது இருந்து அவர்கள் நான் விழித்திருக்கிறதையும், அயர்ந்து நித்திரை செய்வதையும் அறியுமாறு செய்த செய்கைகளோ? அல்லது பூதப் பேய் பிசாசங்களின் சேய்கைகளோ? அல்லது ஊரிலுள்ளாரடங்கியதும் தேவலோகத்திலுள்ள ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை என்னும் மாதுசிரோன்மணிகள் பக்கத்திலுள்ள கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியைக் கண்டு தரிசித்து போவது வழக்கமென ஆன்றோர்கள் அருளியபிரகாரம் அவர்கள் போகையில், அன்னவர்களின் சாயலின் ஒளியோ? பாத சரங்களின் சப்தமோ? அல்லது என்னாயுள்கால முடிவோ! ஐயோ! ஜெகதீசா! எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே! எனக்கு ஒருவிதமான மயக்கமும் உண்டாகிறதே! மணியோ இரவு பன்னிரண்டு ஆய்விட்டதே! ஆ! என்ன செய்வேன்! ரொம்பவும் அகாலமாகிவிட்டதே! கொஞ்சம் சிரம பரிகாரம் செய்துகொள்ளலாம் என்று சொல்லிக்கொண்டு மயக்கமேலிட்டு நார்க்காலியில் சாய்ந்து அயர்ந்து நித்திரைபுரிந்தான்.

அத்தியாயம் 3.

கோகிலமும், பூதமும்.

கோகிலம்:— ஐயோ! தீனபந்தோ! கிருபாநிதியே! தேவ மகாப்ரபோ! முன்பு கதறிய கஜேந்திரனைக் காக்கவில்லையோ! சபையின்முன் அலறிவிழுந்த அபலையாகிய துரௌபதையின் மானத்தைக் காக்கவில்லையோ! என்னை எதற்காகக் காக்கவேண்டுமென்று நினைக்கின்றனையோ! அல்லது முன் ஜென்மாந்தரத்தில் செய்த தீவினையின் பயனை அனுபவிக்கட்டுமென்றிருக்கின்றனையோ: என்னை இப்படி தவிக்கவைத்துவிட்டு நீ சும்மாயிருப்பது அழகாகுமோ! விதை விதைத்தவன் தண்ணீர் ஊற்றுவான் என்று சொல்வதுபோல், இப்பூவுலகில் உண்டாக்கிய என்னை நீர் காக்காமல் வேறு யார் காக்கப்போகிறார்கள்? இரவு

முழுவதும் ஓடிவந்ததினால் என் கால்கள் நோவெடுக்கின்றன. நாவு உலர்கின்றன, கண்கள் சோருகின்றன, செவிகளோ அடைக்கின்றன. இனி என்னால் ஒரு அடிகூட நடக்கமுடிய வில்லையே. என்னசெய்வேன்! ஆ தெய்வமே! ஈசுவரா!...... தாயே! அம்மா! ——— (தொடரும்)

திருக்குறள் மூலமும் உரையும்.

திரு. போ. முத்தைய பிள்ளையவர்கள்

பாயிரம்.

௪. அறன் வலியுறுத்தல்.

அஃதாவது, உலகம் நடைபெறுதற்பொருட்டு முற்றத்துறந்தமுனிவரால் உணர்த்தப்படும் அறம் பொருள் இன்பமென்னும் மூன்றனுள், பொருள் இம்மை மறுமையினையும், இன்பம் இம்மையினையுமாத்திரந் தருதலின், இம்மை வீடு என்னும் மூன்றனையுந் தரும் அறன், ஏனைய இரண்டனிலும் வலிமையுடையதென்று கூறுதல். மேலே அதிகாரத்தால் நீத்தார் பெருமைகூறி, இவ்வதிகாரத்தால் அவரால் கூறப்படும் அறத்தின்வலிமை கூறுதலின் அதிகார இயைபுபெறப்பட்டது. அறத்தின் வழியாகவே பொருளை ஈட்டுதலும் இன்பத்தை நுகர்தலும் முறையாதலின், அதுபற்றி அறன்வலிமை உடையதென்று கூறினாரென்றலும் ஒன்று.

௩௧. சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

(இ—ள்) வீட்டையுந்தரும். இவ்வுலகம் மேலுலகங்களிலுள்ள செல்வங்களனைத்தையுந்தரும். ஆகையால் உயிர்கட்கு அறத்திலும் மேலாக உயர்ந்தது யாது. (எ—று)

ஒருவன் அடையும பேறுகளுள், வீடு சிறந்ததையின், சிறப்பு என்பது வீடு. ஆக்கந்தரும் அறத்தை ஆக்கமென்றார். ஆக்கமாவது மென் மேல் உயர்தல். உயிரென்பது மக்களுயிரைக்குறித்தது. சிறப்பும்செல்வமும்பெறுதற்குறியதுமக்களுயிராதல்காண்க

௩௨. அறத்தின் ஊங்கு ஆக்கமுமில்லை அதனை
மறத்தலின் ஊங்கு இல்லை கேடு.

(இ-ள்) ஒருவனுக்கு அறஞ்செய்தலினும் மேற்பட்ட ஆக்கமுமில்லை, அறியாமையால் அவ்வறத்தை மறத்தலினும் மேற்பட்ட கேடுமில்லை. (எ-று)

மறத்தலினால் கேடு கூறுதற்காக, அறத்தினூங் காக்கமுமில்லையென மேலைச் செய்யுளிற் கூறியதை அநுவாதமாக எடுத்துக்கொண்டார். அநுவாதமாவது பிறிதொன்று கூறுதற்காக முன் கூறப்பட்டதை மீண்டுங்கூறல். (உ)

௩௩. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்.

(இ-ள்) ஒவ்வொருவரும் தத்தமக்கு இயலுந் திறத்தால் அறமாகிய நல்வினையை எக்காலத்தும் அவ்வறம் செய்தற்குரிய இடம் அனைத்தினாலும் செய்க. (எ-று)

ஒல்லுதல்-இயலுதல். ஓவாது-இடைவிடாது. இயலுந் திறமாவது இல்லறம் பொருள் அளவிற்கேற்பவும், துறவறம் உடல் நிலைக்கேற்பவும் செய்தல். செய்தற் குரிய இடங்களாவன, மனம் வாக்குக் காயங்கள். மனத்தால் செய்யும் அறம் நற்சிந்தை, வாக்கால் செய்யும் அறம் நற்சொல். உடம்பால் செய்யும் அறம் நற்செயல். (௩)

௩௪. மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற.

(இ-ள்) மேற்கூறியவாறு மனம் வாக்குக் காயங்களால் அறத்தைச் செய்பவன் மனத்தினிடத்துத் தீய சிந்தையில்லாதவனா யிருக்கவேண்டும். தீய சிந்தை இல்லாமையே அறமாகும். தீயசிந்தையோடு கூடிய அறத்தைப்பற்றிய சொல்லும் செயல்களும் ஆரவாரத் தன்மையவாகுமன்றி அறமெனப்படமாட்டா. (எ-று)

மாசு-தீயன சிந்தித்தல்; மனத்தினிடத்து மாசுவைத்துக் கொண்டு பிறர் புகழ விரும்பி வாக்காலும் காயத்தாலும் செய்யக்

படும் அறங்கள் அறமெனப்படமாட்டா ஆதலின் ஆகுல நீர எவ்ருர். ஆகுலம்-ஆரவாரம். (ச

௩௫. அழுக்காறு அவா வெகுளி யின்னச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

(இ-ள்) பிறருடைய உயர்ச்சிக்குப் பொறாமையும், பொருள்களிடத்துச் செல்லும் விருப்பமும், அவ்விருப்பம் காரணமாகப் பிறரிடத்து உண்டாம் கோபமும், அக்கோபங்காரணமாக உண்டாம் கடுஞ்சொல்லும் ஆகிய இந்நான்கையுமநீக்கி இடையறாது செய்யப்படுவது அறமாகும. (எ-று)

அழுக்காறும் முதலிய நான்கும நீங்க தீயசெயலனைத்தும் நீங்கும். இந்நான்கனேடுங் கூடிச்செய்யப்படும் அறம் அறமெனப் படமாட்டாதென்பது கருத்து. (ரு)

௩௬. அன்று அறிவாம் என்னுது அறம்செய்க மற்று அது
பொன்றுங்கால் பொன்றுத் துணை.

(இ-ள்) யாம இப்பொழுது இளம் பருவமாயிருத்தலின் முதுமைப் பருவத்தில் செய்வோமெனக் கருதாது அறத்தினை எப்பொழுதுஞ் செய்க. அவ்வாறு செய்யப்பட்ட அறம், இவ்வுடம்பினின்றும் உயிர் நீங்குங்காலத்து அவ்வுயிர்க்கு அழிவில்லாத துணையாம். (எ-று)

மற்று என்பது அசைநிலை. அறத்தைச்செய்த உடப்பு அழியவும், அறம் அழியாது அவ்வுடம்பில் நின்ற உயிர் செல்லுமிடத்து அவ்வுயிரோடு சென்று அவ்வுயிர் தைதும் ஏனைய உடம்பினும் பொருந்துதலால் அவ்வறத்தைப் பொன்றுத் துணை யென்றுர். ஏனைய உடமபில் பொருந்துதலாவது, இவ்வுடம்பிற்கு இன்பத்தை விளைவித்தல். (௬)

௩௭. அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானேடு ஊர்ந்தான் இடை.

(இ-ள்) அறத்தின் பயன் இதுவென்று சாத்திரப் பிமாணத்தால் அறிவிக்கவேண்டாம். சிவிகையைச் சுமப்பவனேடு

அதன்மேல் ஏறிச் செல்பவனிடத்துக் காட்சிப்பிரமாணத்தினாலே யே அறியப்படும். (எ-று)

ஆறு என்பது வழி. வழி என்பது பின் உண்டாவது. ஆதலால் பின்னுண்டாகும் பயனை ஆறு என்றார். என என்பதனால் சொல்வடிவாகிய சாத்திரப்பிரமாணமென்பதும், பொறுத்தானோடு ஊர்ந்தானிடை என்பதனால் காட்சிப் பிரமாணமென்பதும் பெறப்பட்டன. அறியப்படும் என்னும் சொல்லின்றி, பொறுத்தானோடு ஊர்ந்தானிடை யென்பது முற்றுப் பெருமையின், அச்சொல் வருவிக்கப்பட்டது. (எ)

௩அ. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

(இ-ள்) செய்யாது கழியும் நாளில்லாமல் எந்நாளும் ஒருவன் அறத்தைச் செய்வனாயின், அச்செயல் அவன்மேல் ஒரு உடம்போடு கூடி வாழும் நாள் வரும் வழியை அடைக்குங் கல்லாம். (எ-று)

வீழ்நாள்-கழியும் நாள். வாழ்நாள்-நல்வினை தீவினை யென்னும் இரு வினைகளின் பயனாகிய இன்ப துன்பங்களை யாதானும் ஒருடம்போடு கூடி அநுபவிக்கும் நாள், அது வரும் வழியை அடைத்தலாவது பிறவியறுதல். (அ)

௩௯. அறத்தான் வருவதே யின்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல்.

(இ-ள்) அறத்தோடு கூடிவரும் இன்பமே இன்பம்; அறத்தோடு கூடாது வருவன அனைத்தும் இன்பம்போலத் தோன்றினும் துன்பமாகவே முடியும். அம்மட்டோ புகழுடையனவாகவும் ஆகா. (எ-று)

அறத்தான் என்பது அறத்தோடு என்னும் பொருளில் வந்தது. இன்பம் என்பது காமத்தால் அநுபவிக்கப்படுவது. புறத்த என்றதனால் துன்பமாயிற்று. பாவத்தால் வரும் பிறனில் விழைதல் முதலாயின அப்பொழுது இன்பமாய்த் தோன்றினும் பின்

துன்பமாய் முடிதலின் புறத்த என்றார். அறத்தோடு வாரா அனைத்தும் துன்பமேயன்றிப் புகழும் இல்லாதன என்றதனால், அறத்தோடு வருவது இன்பமும் புகழும் உடைத்தென்பது பெறப்படும். (௬)

௪௰. செயற்பாலது ஒரும் அறனே ஒருவற்கு
உயற்பாலது ஒரும் பழி.

(இ-ள்) ஒருவனுக்குச் செய்தற்றன்மையது நல்வினையே. ஒழிதற்றன்மையது தீவினையே. (எ-று)

ஒரும் என்பன இரண்டும் அசைநிலை. அறனே என்றவிடத்துள்ள ஏகாரம் பழி என்றவிடத்துங் கூட்டப்பட்டது. அந்த ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. பழி என்பது பழிக்கப் படுந் தீவினையைக் குறித்தது. (௰)

இவ்வதிகாரத்து முதற்செய்யுளால் போக மோக்ஷம் இரண்டையுந் தாவல்லது அறமாதலின் அறத்தினும் உயர்ந்தது ஒன்றில்லையெனவும், இரண்டாவது செய்யுளால் அவ்வறத்தை மறத்தலினும் மேலான கேடு இல்லையெனவும், மூன்றாவது செய்யுளால் அறம் அனைத்தும ஒருவனால் செய்ய இயலுமோ என்னும் ஐயத்தை நீக்குதற்கு தன்னால் இயன்றவாறுசெய்யலாமெனவும், நான்காவது செய்யுளால் இயன்றவாறு செய்யுங் காலத்தும் மனத்தினிடத்துத் தீய எண்ணம இன்றிச் செய்யவேண்டுமெனவும், ஐந்தாவது செய்யுளால் அறத்தை இயன்றவாறு செய்யலாமென்பதுபோல, தீய எண்ணமும் பலவாகுமாதலின் அவற்றையும் இயன்றவாறு நீக்கலாமோ என்னும் ஐயத்தை நீக்கித் தீய எண்ணம் அறவே நீங்கவேண்டுமென்னுங் கருத்தால், தீயனவற்றிற்கெல்லாம் முதன்மையாய அழுக்காறு முதலிய நான்கையும் நீக்கிச்செய்வதே அறமெனப்படுமெனவும், ஆறாவது செய்யுளால் அறம் இன்றியமையாது செய்யத் தக்கதாயினும் முதுமைப்பருவத்தில் செய்யலாமென்றெண்ணாது எப்பொழுதும் செய்யின் அழியாத் துணையாகுமெனவும், ஏழாவது செய்யுளால் அறத்திற்கு இம்மைப் பயன் உண்டென்பது முற்பிறவியில் செய்த அறத்தின்பயனாக இப்பிறவியில் சிவிகையில் ஏறிச்செலுத்துவோ

னிடத்துக் காட்சிப் பிரமாணத்தால் அறியப்படுமெனவும், எட்டாவது செய்யுளால் அறம் இம்மை மறுமைப் பயனே யன்றி வீட்டையுந் தருமெனவும், ஒன்பதாவது செய்யுளால் மேல்வரும் இன்பத்தைக்கருதிச் செய்யப்படும் அறத்தால் இப்பொழுது இன்பம் வாராமையால் இன்பத்தை யிழந்து அறத்தைச் செய்ய வேண்டாம் என்பாரை மறுத்து, இப்பொழுது நுகரப்படும் இன்பமும், அறத்தொடு நுகரப்பட்டால் மாத்திரம் இன்பமாருமன்றி, பாவ வழியில் நுகரப்பட்டால் துன்பமாகவே முடியுமெனவும், பத்தாவது செய்யுளால் இதுவரையும கூறியவாற்றால் ஒவ்வொருவரும் செய்யத்தக்கது அறமாகிய நல்வினை யெனவும, செய்யாது தள்ளத்தக்கது பாவமாகிய தீவினை யெனவுங கூறியவாறும.

பாயிரம் முற்றிற்று.

குறிப்புகள்.

சபாஸ் ஜட்ஜி.

சென்னை நகர சபையின்மீது பர்மாயில் கம்போனியார் ஒரு வழக்குத் தொடுத்திருந்தனர்; வழக்கின்சாரம்:— நகரசபை எல்லைக்குள் வைக்கப் பட்டிருக்கும் பெட்ரோல் எண்ணைப் பம்புகளுக்காக பம்பு ஒன்றுக்கு ரூ 50 கட்டணம் வசூலிப்பதெனத் தீர்மானித்து வசூலித்துவிட்டனர். அக்கட்டணத்தொகை ரூ 3000 சொச்சம் அதிகமானபடியால் வாபஸ் செய்யவேண்டுமென்றும் மீண்டும் அதிகப்படியான தொகை வசூலிக்கக் கூடாதென்றும் ஆரம்பத்தில் கட்டணம் முறையே ரூ 3, 13 ஆகவிருந்து வந்ததென்றும, பிறவுமாம். எதிர்வாதம்:— குழாய் கட்டியிருப்பதற்காக வாடகைத்தொகை வசூலிக்கப்படுகிறதென்றும் லைசென்ஸ் கட்டண மல்ல வென்றும் இவ்விஷய சம்பந்தமானவற்றை நகரசபை கவனிக்கவேண்டுமே யல்லாது கோர்ட்டு கவனிக்கமுடியாதென்றும் பிறவுமாம். இவ்வழக்கை விசாரித்த நீதிபதி கனம் எட்டி, இக்கட்டணம லைசென்ஸாகத்தான் வசூலிக்கப்படுகின்றதென்றும் ஐம்பது ரூபாய் லைசென்ஸ் அநியாயமென்றும் இனி பதினமூன்று ரூபாயே வசூலிக்கவேண்டுமென்றும் வாதியின் செலவையும் நகரசபை கொடுக்கவேணுமென்றும் 2—12—29ல் தீர்ப்புக்கூறினார். கனம் நீதிபதி கூறிய தீர்ப்புப் பாராட்டத்தக்கது. அரசாங்கம் சம்பந்தமுடையது; நகரசபையென்று தாட்சனியப்படாமல் நீதி வழங்கிய நீதிபதி கனம் எட்டி அன்றோ சபாஸ் ஜட்ஜி.

நாட்டு வைத்தியத்தில் நாட்டமுண்டோ?

நாட்டு வைத்திய அபிவிருத்திக்காக அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டுவந்த ஒன்பதினுயிர ரூபாயை பன்னீராயிர ரூபாயாக அதிகப்படுத்த வேணுமென்று பஞ்சாப் சட்ட சபையில் ஜனப்பிரதிநிதி அங்கத்தினர் ஒருவர் தீர்மானங் கொண்டுவந்தனர். தீர்மானம் தோற்றுப்போயிற்று. நாட்டுவைத்தியக் கல்வியைப் போதிக்கும் கல்லூரிகள் இரண்டே இருக்கின்றனவென்றும் இவைகளுக்குத் தற்போது எவ்விதவுதவியும் தேவையில்லையென்றும் வைத்திய இலாகா மந்திரி இறுமாந்து கூறிவிட்டார். நாட்டுவைத்தியத்திற்கு மூவாயிர ரூபாய் அளிக்க மனமில்லாத இந்தவைத்திய இலாகா மந்திரி ஆங்கில வைத்திய அபிவிருத்திக்கும் ஐ. எம். எஸ். உத்தியோகஸ்தர்களுக்கும் எவ்வளவு பணம் செலவழிக்கின்றாரென்பதை அறிய ஆவலுடையோம். இரட்டையாட்சியின் கீழ் பல இலாக்காக்கள் மந்திரிமார் ஆதிக்கத்திலிருந்தும் அவை இந்திய மக்களுக்கு நன்மை பயக்கும் வழியில் எவ்வளவு தூரம் நடத்துகொள்ளுகின்றன என்பதை நாம் விரிவாக விளக்கவேண்டுவதில்லை. நமது அரசாங்கத்தாருக்கு வைத்தியத்திலும் வேற்றுமையுணர்வு உண்டாவதுவியக்கத்தக்கது. ஐரோப்பியருக்கு ஆங்கில வைத்தியம் அவசியமாவதுபோல் இந்தியருக்கு நாட்டு வைத்தியம் அவசியமல்லவா? இதனையுணர்ந்து நாட்டு வைத்தியத்தில் நாட்டங்கொள்கின்றனரோ? இல்லை என்பது யாவரும் எளிதில் உணரும் வுண்ணம் இக் கட்டுரை விளக்கிக் காட்டுகின்றதல்லவா?

வெடிக்குண்டு விபத்து

லார்டு இர்வினும் லேடி இர்வினும் இவர்களின்சேவகர்களும் சமீபத்தில் நேர்ந்த வெடிக்குண்டு விபத்தில் பிழைத்தமை குறித்துப் பெரிதும் போற்றுகின்றோம். விபத்தில் அபாயம் வராமற்றடுத்து சுகமாக வைத்த சுபபரம் பொருளின் கருணையை மனமாற வாழ்த்துகின்றோம். வெடிக்குண்டு எறிந்தவர் எவரோ யெனினும் அவர் செயல் அழுத்தமாய் அறுவறுக்கத்தக்கது.

சாய்ம் வேளுந்தந்து.

சமீபத்தில் நிகழ்ந்த காந்தி இர்வின் கலப்பால் ஐரோப்பிய அரசாங்கத்தாரின் மனப்பான்மை வெட்ட வெளிச்சமாயிற்று. இதன்முன் பன்முறையும் இந்தியரை ஏமாற்றிய இவ்வரசாங்கத்தார் இப்பொழுது ஏமாற்றியதும் இயற்கையே. இனியேனும் இந்தியர் ஏமாருமல் ஒத்துழையா

மையில் ஒருப்பட்டு நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றி, விடுதலையைப் பெறுவார்களாக.

லாகூர் காங்கிரஸ்;

லாகூரில் காங்கிரஸ் மஹா சபையானது மிகவும் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. பழைய ஒத்துழையாமையின் முக்கிய அம்சத்தையும், நிர்மாணத்திட்டத்தையுமே வலியுறுத்தியிருக்கிறது மிகவும் போற்றத் தக்கதாகும். இத்தகைய நல்லதருணத்தில் சிலதலைவர்கள் தங்களுக்குக் காரிய கமிட்டியில் ஸ்தானம் கிடைக்கவில்லை யென்பதற்காக புதியதோர் கட்சி ஸ்தாபித்துக்கொண்டு பிளவுசெய்திருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். இத்தகைய தலைவர்கள் மலிந்த இந்தியா எப்பொழுது சுதந்தரம் பெறுமோ? நாம் சொல்லுவதற்கில்லை. இத்தகைய தன் நலம் விரும்பும் தலைவர்களை மக்கள் ஒருசிறிதும் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு நல்ல பாடம் கற்பித்துக்கொடுக்கவேண்டும். காங்கிரஸ் அஹிம்ஸா தர்மத்தை அடிப்படையாகக்கொண்டு தமது வேலையை நடத்திவருவதோடு புரட்சி இயக்கத்தில் மக்கள் தலையிடாதவாறு தகுந்த வேலைசெய்துகொள்ளவேண்டும். புரட்சி இயக்கம் இம்மை மறுமை இரண்டிற்கும் இடுக்கண் விளைவிப்பதென யாவரும் எளிதில் உணரவேண்டுகிறோம்.

நிலவுலக நிகழ்ச்சிகள்.

இந்தியாவில் விவசாயம் சாகுபடியான விஸ்தீரணம், சென்ற 1927, 1928ம்-ஆண்டில் 2 கோடியே 75 லக்ஷம் ஏக்கர் நிலங்களாம். 1922-23ம் விட, சென்ற வருஷத்தில் சாகுபடி செய்த நிலங்களில் 8 லக்ஷம் குறைந்திருக்கிறதென்றும் பயிர்ச்செலவில் சுமார் ½வட்டிவீதம் வருமானங்கிடைத்திருக்கிறதென்றும் அ. பிரஸ் அறிவிக்கிறது.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்திற்காகத் துறைமுகப் போர்ட்டாருக்கு ஒரு கோடி ரூபாய் கொடுக்கும்படி சென்னை சர்க்கார் இந்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்திருக்கிறார்களென்று நம்பத் தகுந்த இடத்திலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

சீதம் ஜனவரி பிப்ரவரி மாதங்களில் சமீபத்தில் வங்காளத்தில் நியமிக்கப்பெற்ற விவசாயக் கமிட்டியார் கங்கை, யமுனை, மேக்ரு, முதலிய நதியோரத்திலுள்ள பாகங்களை பார்வை செய்து விவசாய விஷயமாய் யாது சீர்திருத்தஞ் செய்ய வேண்டுமென வங்காள சர்க்காருக்குச் சிபார்சு செய்வார்களெனத் தெரிகின்றது.

இந்தியாவிலுள்ள சுமார் 46 ஸ்தல ஸ்தாபனங்கள் கதர்மீது வரி விதியாமலும், சீமைத்துணிகள்மீது வரி விதித்தும் தங்களுக்கு வேண்டிய துணிகளுக்குக் கதர் துணியையே வாங்கி கதரை ஆதரிக்கின்றன வென்றும், கதர் 1927-28 ஆம் வருஷத்தைவிட 1929ம் வருஷம் நூற்றுக்கு 50 வீதம் விற்பனை அதிகரித்திருக்கிறதென்றும் 50 லக்ஷ ரூபாய் மதிப்புள்ள கதர் விற்பனையாயிருக்கிறதென்றும் கதர் கமிட்டியின் அறிக்கையில் காணப்படுகின்றது.

சென்னை சங்கீத வித்வசபையினர் நாளது ஜனவரி மாதம்முதல் நமது நாட்டுச் சங்கீதப் பெருமைகளைப்பற்றி அரிய விஷயங்களடங்கிய சங்கீதப் பத்திரிகை யொன்று ஆரம்பஞ்செய்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெளியிடக்கருதி யிருக்கின்றார்களாம்.

திருநெல்வேலி ஜில்லா கீழக்கரையைச் சார்ந்த நூர்முகம்மது மரைக்காயர் (யூனியன் போர்டு தலைவர்) இரத்தினம வைரக்கற்களுடன் அபின் கட்டிகளையும் சென்னையிலிருந்து கொண்டுவந்ததாகத் திண்டிவனம் ஜாயிண்டு மாஜிஸ்ட்ரேட் விசாரித்துவந்த வழக்கில் ஷை மரைக்காயருக்கு ரூ 800 அபராதமும் 8-மாதம் சிறைத்தண்டனையும் விதிக்கப்பெற்றதெனத் தெரிகின்றது.

சென்னையில் கந்தசாமி என்ற 18 வயது பட்டுநூல்காரஜாதி வாலிபன் தந்தை கடன்பட்டுக் கடன் கொடுக்க வழியின்றி கடன்காரரால் ஜயிலுக்கு அனுப்பப்பட்டதை அறிந்து வருந்தி மானம் பொறாமல் சென்ற மாதமத்தியில் திருவல்லிக்கேணி பெரியமசூதியிலுள்ள குளத்தில்விழுந்து இறந்து போனான். இந்த இளைஞனின் மானத்தை வானமும்போற்றும்.

வடக்கே பஞ்சாப் அமிர்த சரசில் நெசவு வேலைசெய்யும் ஒரு முஸ்லீம் வீட்டுக்குச் சில விருந்தாடிகள் சென்றார்கள். முஸ்லீம் ஏழை அவர்களுக்கு விருந்துசெய்வதற்கு எவ்வளவோ பாடுபட்டும் முடியவில்லை. அதனால் வந்தவர்களுக்கு உணவு அளிக்கமுடியாத நிலையையுணர்ந்து மானப்பட்டு தற்கொலைசெய்து உயிர் துறந்தானாம்.

கோயம்புத்தூர் ஜில்லா கொள்ளேகாலத்தில் இரண்டு போக்கிரிகள் சென்ற ஆகஸ்டு மாதத்தில் ஒரு நாள் இரவு பசுவி என்ற மாதை அவள் கணவன் இல்லாத சமயத்தில் கற்பழித்துவிட்டு ஓடிவிட்டார்கள். மானம் அழிந்த பின் வாழலாகாதென்று மேற்படி பெண் மறுநாள் ஒரு வாய்க்காலில் விழுந்து உயிர் துறந்தாள். குற்றவாளிகள் அகப்பட்டதில் ஐந்தைந்து வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

திரு. சி. வ. அவர்கள் மகன் திரு. ந. சண்முகசுந்தரம் பிள்ளையவர்கள் இங்கிலாந்திலிருந்து பிரயாணமாகி சங்கிராந்தியாகிய இன்று கப்பலில் தூத்துக்குடிவந்து சேர்ந்தார்கள் இவர்கள் வரவு நல்வரவாகுக.